வித்துவான் க. ந. வேலன்

# கண்ணகி சிந்தாத கண்ணீர்

# கண்ணகி சிந்தாத கண்ணீர்

வித்துவான் க.ந.வேலன்

**Tamil Music Centre**
தமிழ் இசை மன்றம்
66, உவெஸ்றோ காடின்ஸ்,
செவின் கிங்ஸ், இல்போட்,
எசெக்ஸ் - IG3 9NF, இலண்டன்

கண்ணகி சிந்தாத கண்ணீர்
முதற் பதிப்பு : மே, 2003

விலை : ரூபா 50/-

KANNAGI SINDHATHA KANNEER
by VITHTHUVAN K.N. VELAN
First Edition : May, 2003

அட்டை வடிவமைப்பு : ரோஹன் பின்னி

Laser Typeset : Thanga.Kamaraj ✆ 044-2433 2272 Cell : 94441 32738
Printed at : 3D Vision, Chennai ✆ 044-2823 7241

## காணிக்கை

கற்பின் வெப்பால் காவலனோடு மதுரையை அழித்த கண்ணகிபோல, கற்பின் பொறுப்பால் ஈழத்தாயகம் மீட்கப் போரிடும் தாய்க்குலத்துக்கு இந்நூல் காணிக்கை.

# என் உரை

தமிழர்கள் ஊன்றிப் படிக்க வேண்டிய நூல்களுள் ஒன்று சிலப்பதிகாரம். பலமுறை உரையோடு உள்வாங்கிப் படித்த பின், மூலநூலை மங்கல வாழ்த்துப் பாடல், கானல் வரி போன்ற வற்றை இசைத்துப் பாடி, அனுபவித்து, நூல் முழுவதையும் படித்து முடிப்பதற்கு, ஒருவருக்கு இரண்டு மணி நேரத்துக்கு மேல் தேவைப்படும்.

வைதீக மதத்தினரின் மதக்காழ்ப்பினால் புறக்கணிக்கப் பட்ட தமிழ்ச் சிந்தனைகள் பல; திருவள்ளுவர், திருமூலர் ஆகியோரின் சிந்தனைகள் கூடத் தப்பவில்லை. கம்பனையும் ஒதுக்கினர். சிலப்பதிகாரம் ஒதுக்கப்பட்டதில் வியப்பில்லை.

வைதீகத்தினர், பௌத்தர், சமணர் என அன்று ஒதுக்கினர். இன்று, மேல்நாட்டாரின் பார்வையில், பெண்ணியல் வாதம் பேசுவோர், சீதை, கண்ணகி, மணிமேகலை போன்றோரை, வாழத் தெரியாதோர் எனப் புறக்கணிக்கின்றனர். சிலப்பதிகாரச் செய்யுளின் பரற்கற்கள் மூன்று. அவற்றுள் முக்கியமானது ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது. கண்ணகி, கோவலன் ஆகியோரின் அவல வாழ்வுக்கு, ஊழ்வினையே மூல காரணம் என்பது வற்புறுத்தப்படுகின்றது. ஊழ்வினைக் கோட்பாடு, தமிழர் வாழ்வின் அனுபவத்தாலும், இந்து சமய, சைவ சமயக் கோட்பாடுகளாலும் பல்லாண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. அதீத விதி நம்பிக்கை, தமிழினத்தின் தன்முயற்சியைச் செயலறச் செய்தது என்பது

மறுக்க முடியாத உண்மை. முயற்சி அற்று, சோம்பிக் கிடப்பதற்கு இது ஒரு நல்ல சாக்காக அமைந்து விட்டது. வள்ளுவர், விதியையும் மதியையும் நமக்கு விளங்கப் படுத்தியுள்ளார். ஆனால் நமக்கு விளங்கவில்லை.

கண்ணகி போலத் தூயவனாக, உயர்ந்த குறிக்கோள் உடையவனாக இல்லாவிட்டாலும், கோவலன் தீயவனல்லன். கோவலன், சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக் குலம் தரு வான்பொருட்குன்றம் தொலைத்தகாலைத் தடுக்க முடியாவிட்டாலும், கோவலன் மதுரைக்கு எழுக என்றபோது எழாது, கண்ணகி அவனைத் தடுத்திருந்தால், பின்னர் நிகழ்ந்த அவலங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாமல்லவா? இலக்கியத்தை உணர்வினால் உணர்ந்தும், அறிவினால் ஆய்ந்தும் கற்க வேண்டும் என்பார் மு.வரதராசனார். இலக்கியப் பொருளை, பாவிகத்தை, அறிவினால் ஆயவேண்டும்; அதன் வெளிப் பாட்டை உணர்வினால் சுவைக்க வேண்டும். கண்ணகியின் பண்பு நலன்களையும் சூழ்நிலைகளையும் கொண்டு ஆராயும் போது, அவளது அறிவு மடம் பட்டிருந்த காரணத்தினாலேயே எழுகென எழுந்தாள். அந்த அறிவு மடம்படக் காரணம் என்ன? கானல் வரி கனகவிசயர் முடித்தலை நெரித்தது என்பது போல, கண்ணகியின் அறிவு மடம், கோவலன் கொலையும், மதுரை அழிவும் ஆயிற்று என்று கருதலாமா?

மு.வரதராசனார், கோவலன் கண்ணகியின் செயற் பாட்டிற்கு, அவர்களின் பண்புநலனும் சூழ்நிலையுமே காரணம் என நம்புகின்றார். அவர்களுக்கு அத்தகைய பண்பு நலனும் சூழ்நிலையும் ஏற்படக் காரணம் என்ன? அறம் தவறாப் பாண்டியர் வழிவந்த செழியன், பாண்டிமாதேவியின்

ஊடலால் மனம் பேதலித்து, கொன்றச் சிலம்பு கொணர்க எனக் கூறக் காரணம் என்ன? பாண்டியனின் பண்பு நலனும் சூழ்நிலையும்தான் காரணமா? இவ்விடங்களில்தான், ஊழ்வினைக் கோட்பாடு நம்மைச் சிந்திக்க வைக்கிறது. மதியை மயக்கி, விதி முந்துகின்றது. அவ்வை கூறுவது போல, விதியே மதியாகி விடுகிறது. விதி வழியே மதி செல்கிறது; மற்றொன்று சூழினும் விதி முந்துகின்றது. நீர்வழிப்படூஉம் புணைபோல, ஆருயிர் முறை வழிப்படூஉம் என்பது திறவோர் காட்சியில் கண்டனம் என்பது புரிகிறது. எனவே எல்லாம் ஊழ் எனத் தன்முயற்சி அற வேண்டும் என்பது கருத்தல்ல. வகுத்தான் வகுத்தபடிதான் நடக்கிறது. மனித உணர்வினால் உணர்ந்தும், அறிவினால் ஆய்ந்தும் இலக்கியத்தைக் கற்கலாம். ஆனால் அவற்றிற்கு அப்பாற் பட்ட ஊழின் செயலை விஞ்ஞானத்தால் உணர முடியாது. அதனை உணர, மெய்ஞ்ஞானம் வேண்டும். சான்றோர் கொடி வழியில், திரு.வி.க.வுக்குப் பிறகு பூத்த குறிஞ்சி மலர் மு.வ. அவர்களை, அவர் இல்லமாகிய தாயகத்தில் ஒரு மாலை சந்தித்தேன். அன்பர் அ.ச.ஞா. தந்த அறிமுகக் கடிதத்தைக் கொடுத்து என்னை அறிமுகப்படுத்தினேன். வெள்ளித் தட்டில், செந்நிறப் பப்பாளித் துண்டுகளைப் பரிமாறி, சுக்குக் கோப்பியும் தந்து உபசரித்தார். மகனை அழைத்து, விளக்கைப் பொருத்து எனத் தூய தமிழில் கூறினார். மறக்க முடியாத சான்றோர் அனுபவம். பேச்சு வாக்கில், திரு.வி.க.வின் இறுதிக்காலம், உடல்நலம் பற்றிய பேச்சு வந்தது. நூறாண்டு வாழக்கூடிய மனநலமும், உடல் நலமும் வாழ்வு நலமும் மு.வ.வுக்கு வாய்த்திருந்தன. வாழ, அவரும் விரும்பினார். ஆனால் 62 ஆண்டுகளே வாழ்ந்தார். ஏன்? அவரது குண

நலனும் சூழ்நிலையும் காரணமா? அல்லது வேறொன்றா? அது எது? அதுதான் ஊழ்; ஊழ், ஊழே. அதனையே ஊழ் வினை உருத்து வந்தூட்டும் என ஒரு பரலாக அமைத்தார் இளங்கோ. எனவே இலக்கியங்களை, மேனாட்டார் வழியில் விஞ்ஞானக்கண் கொண்டு பார்ப்பதோடு, மெய்ஞ்ஞானக் கண்கொண்டும் பார்க்க வேண்டும்.

நம்மவர் ஊழுக்கு முதன்மை வழங்கினர்; மிக மிக முதன்மை வழங்கினரென்றால், அவர்களின் வாழ்வு அனுபவம், அப்படிச் சிந்திக்க வைக்கிறது. விதிக்கு விதி செய்வேன் என் விற்றொழில் காண்டி என வீதியில் புறப்பட்ட இலக்குவனை, ''தம்பி! விதியின் பிழை இதற்கென் தொல் வெகுண்டது'' என்றான் இராமன். இராமனுக்கு இந்தக் கதி வந்ததற்குக் காரணம் என்ன? தசரதன், கைகேயி, இராமன் முதலியோரின் பண்பு நலன்களையும் சூழ்நிலையையும் காரணம் காட்டி அமைதி பெற முடியுமா?

எனவே இலக்கிய விமர்சகர்கள், பெண்ணியல்வாதிகள், கண்ணகி சிந்திய கண்ணீரையும், சிந்தாத கண்ணீரையும், அவளின் ஆறிய கற்பையும், சீறிய கற்பையும், இலக்கிய விமர்சன உரைக் கல்லில் உரைப்பதோடு, அதற்கப்பாலும், விளக்க முடியாத வாழ்வனுபவம் கொண்டு காண வேண்டும். ஆழ்ந்து சிந்திக்கும் ஒவ்வொருவரும், தமது குணநலன் களுக்கும் சூழ்நிலைக்கும் அப்பால், ஊழின் தாண்டவத்தை உணராமல் இருக்க முடியாது.

தமிழ்ச்சாதி, அமரத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டு மானால், மூன்று நூல்களைப் போற்ற வேண்டும் என்றான் பாரதி. அதற்குக் காரணமும் கூறினான் பாரதி. சிலம்பைப்

போற்ற வேண்டும் என்றவன் அதற்குக் காரணம் கூறும்போது, சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் எனச் சுருக்கமாகச் சொல்லிப் போனான். அந்தச் சிலம்பின் செய் + உள் மூன்று. அந்த மூன்று பரல்களையும் போற்றி வாழ்ந்தால் தமிழ்ச்சாதி அமரத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றான்.

இந்தச் சாதனைகளைப் பாரதி, தனது நூற்புலமை யினாலோ, கவித்துவத்தினாலோ, கண்டுகொள்ளவில்லை. உள்ளத்தில் உண்மை ஒளி உள்ள புலவனின் அந்த ஒளியில் தெளிவான காட்சிகளே இவை. அவன் சீவநிலை அற்றுச் சீவன் முத்த நிலை உற்று வாழ்ந்தவன். அந்த நிலையில் வந்த மந்திரச் சொற்களே இவை.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதை அரசியலார் உணர்ந்தால் நாட்டில் நல்லாட்சி நடக்கும்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதை மகளிர் உணர்ந்தால் நாட்டில் ஒழுக்கம் சிறக்கும்.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதை எல்லோரும் உணர்ந்தால், மக்கள் தவறு செய்ய அஞ்சுவர்.

இவற்றால், தமிழினம், அமரத்துவம் வாய்ந்ததாக வாழும். மழை விட்டும் தூவானம் மாறவில்லையே! தூறல் விட வில்லையே; தூறிக் கொண்டிருக்கிறதே!

இளங்கோ அடிகள், கண்ணகி கதையை நடத்திச் செல்லும் விதம் இறும்பூது விளைக்கின்றது. கண்ணகி பிரிவு பொறுத்திருந்த கற்பையோ, 'சிலம்புள கொண்ம்' எனக் கூறி, எழுகென எழுந்ததையோ, மதுரை வரை வழி நடந்த வருத்தத்தையோ, பின்னர் மதுரையில் இடையர் இல்லில்

நடந்த நிகழ்ச்சிகளையோ, எதையுமே கண்ணால் கண்டவர் இல்லை. அவர் அறிந்ததெல்லாம், அரசு துறந்து, குண வாயிற் கோட்டத்து இருந்த காலை, குன்றக் குறவர் கூறிய செய்தியும், உடனிருந்த சாத்தனார் "யான் அறிகுவன் அது பட்டது" எனக் கூறிய விளக்கமுமே ஆகும்.

இவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு, நெஞ்சை அள்ளும் இந்தச் சிலம்பை அளித்தார் என்பதும், கண்ணகி சிந்திய கண்ணீரைக் காட்டிக் கட்புலனாகாச் சிந்தாத கண்ணீரை உய்த்துணர வைத்து, வள்ளுவர் காட்டும், மனைமாட்சிக்கு விளக்கமாகக் கண்ணகியைப் படைத்து, தமிழ் மகளிர் எப்படி வாழ வேண்டும் என்று உணர்த்திய மாண்பும் நெஞ்சை அள்ளுகின்றன.

ஒரு துறவியின் - ஒப்பற்ற துறவியின் - ஞானக் காட்சியில் இவை எல்லாம் தோன்றியதில் வியப்பில்லை. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சாதாரண சிறு முதுக் குறைவியின் வாழ்வு சாகா இலக்கியம் ஆயிற்று. அதனால்தான் தமிழினத்தின் அமரத்துவத்துக்குச் சிலம்பை இலட்சியமாக்கினான் பாரதி.

எந்தப் பெண்ணுமே, கணவனைப் பிரிய, அதுவும் வேறொருத்திக்காகப் பிரியப் பொறுக்கமாட்டாள். கண்ணகியைப் பிரிந்திருந்தபோதும், இலம்பாடு நாணுத் தரும் என வந்து நின்ற போதும், மாதவியைப் பற்றி ஏதும் கூறி, நொந்து நிற்கும் கணவனை மேலும் நோகச் செய்ய விரும்பாத பெருந்தன்மையை எப்படிப் பாராட்டுவது? இங்ஙனம் கண்ணகியை உயர்த்தும் கவிஞன், ஆடல் பாடல், அழகால் மட்டுமல்ல, மாதவி குணத்திலும்

குணக்குன்று என்பதைப் பல இடங்களில் காட்டுகின்றார். சித்திராபதி, மணிமேகலையைக் குலத்தொழிற்படுத்த விரும்பியபோது, மாதவி என் மகளல்ல கண்ணகியின் மகள் என்று ஒரு வார்த்தையின் மூலம், பண்பாட்டின் சிகரத்தை எட்ட வைத்து விட்டார் இளங்கோவடிகள்.

இளங்கோ அடிகளும் அரசுத் துறவி ஆதலால், மூவேந்தர் நாட்டையும் முத்தமிழையும், அவற்றுக்கப்பாலான ஞானத் தமிழையும் நன்கறிந்திருந்தார். எத்தனை செய்திகள்! எத்தனை விழுமியங்கள்! எத்தனை இலட்சியங்கள்! றோயல் இங்கிலீஷ் (Royal English) என்பது போல, பாண்டியன் தமிழ் என ஒரு தமிழ் நடையைத் தமிழுக்குத் தந்தது சிலப்பதிகாரம். ஏனெனில் அதனை அருளியோன், ஓர் இளம் கோ (அரசகுமாரன் - Royal Prince)

எங்கள் தாயகத்தில் மாரி மழை ஓர் அழகு, ஒரு செய்தி. அது பாட்டம் பாட்டமாகப் பெய்யும்; வானம் இருண்டு கறுத்து, முழங்கி, மின்னிச் சோவெனப் பெய்யும். ஓர் ஆச்சல் முடிந்தவுடன், பிறகு கொஞ்ச நேரம் தூறும். நாம் மழை விட்டுவிட்டது என நினைப்போம். பிறகு அடுத்த பாட்டம் தொடங்கும்; பிறகு நிற்கும், தூறும்; பிறகு ஒரு பாட்டம். பிறகு தூறும். வயல் நிறைந்து, தோட்டம் துரவு முட்டி, வளவு வாய்க்கால் வழிந்து ஒரே வெள்ளக்காடு. மனிதனின் மன வளமும் அப்படித்தான். சிந்தித்துக் கருத்து முட்டி முழங்கிப் பெய்கிறது; தூறுகிறது; பாட்டம் பாட்டமாகப் பெய்கிறது.

தொல்காப்பியர், வள்ளுவர் என்போர் கூட, பரத்தையர் என, மகளிரில் ஒரு பிரிவினரைக் குறிப்பிடுகிறார்களே! மானிடச் சமுதாயத்தின் எடுபிடிகள் அல்லவா?

ஆணாதிக்கத்தின் வாரிசுகள் அல்லவா? பெண்களை அடிமைப்படுத்திப் பேசும் இவர்கள், ஆண்களின் காம வக்கிரங்களுக்கு வடிகால்களாக மகளிரைச் சித்திரிக்கும் இவர்கள் எல்லாம் சான்றோரா என்று ஒரு குரல் ஒலிக்கிறது, தொல்காப்பியரையும் வள்ளுவரையும் நோக்கி.

பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்றவர்களின் உள்ளத்தே இப்படி ஒரு வினா எழுவது இயற்கையே. தொல்காப்பியர், அக்காலத் தமிழ் எழுத்து, சொல், அவற்றால் உணர்த்தப்படும் பொருள் பற்றிக் கூறி வரம்பு செய்கின்றார். பொருள் பற்றிக் கூறும்போது, அக்காலத்துப் போற்றப்பட்ட (என்றும் போற்றப்பட வேண்டிய) பெண்களின் கற்பு என்னும் பொருள் பற்றிக் கூறுகின்றார். முதலில் நாம் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்; தொல்காப்பியர் அக் காலத்தில் இருந்த எழுத்து, சொல், பொருள் வழக்குகளைக் கூறுகின்றாரேயன்றிக் கீழ்க் கணக்கு நூல்களைப் போல, இப்படித்தான் இருக்க வேண்டும் என, அறம் கூறவில்லை; அது அவர் பணியுமல்ல. அக்கால மகளிரில் கற்புள்ள பெண்கள் இப்படி இருந்தார்கள் என்றும், கற்பு, நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலியன குறைந்த பெண்கள் இப்படி இருந்தார்கள் என்றும் கூறுகின்றார். தொல்காப்பியரின் கூற்றை, உரையாசிரியர்கள், அக்கால இலக்கியங்களை மேற்கோள்காட்டி விளக்கிச் செல்கின்றனர். அக்காலத்தில் கற்புள்ள மகளிர் தவிர்ந்த ஏனைய பெண்களாகக் காமக் கிழத்தியர், இற்பரத்தையர், சேரிப்பரத்தையர், வரைவின் மகளிர் எனப் பலர் வாழ்ந்தனர். இவர்கள், ஆடல், பாடல், அழகு ஆகியவற்றைப் போற்றி வளர்த்து வாழ்ந்தனர். இவற்றால் ஈர்க்கப்பட்ட செல்வம் நிறைந்த நகர நம்பியர்,

கற்புள்ள மனைவியர் இல்லில் இருப்பவும், இவர்களிடம் விடுதல் அறியா விருப்பினர் ஆயினர். அவர்களிடம் போய்க் கைப்பொருள் இழந்தனர். அங்ஙனம் இழந்து வறியவன் ஆனவனே கோவலன்.

அக்காலத்து ஆடவர், தம் மனைவியரை விட்டுப் பிரிந்த பிரிவானது, கல்வியிற் பிரிவு, தூதிற் பிரிவு, போரிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு முதலியன என்று கூறப்படுகின்றது. ஆனாலும் மற்றெல்லாப் பிரிவுகளையும் விடப் பரத்தையிற் பிரிவே பெரிதும் பேசப்படுகின்றது. வள்ளுவரும் ''பெண்ணியலார் எல்லோரும் கண்ணின் பொது உண்பர், நண்ணேன் பரத்தநின் மார்பு'' எனக் கூறுகின்றார்.

பிரிவின் போதே பெண்ணின் கற்புச் சோதிக்கப் படுகின்றது. கற்பியல் பற்றிக் கூறாத வள்ளுவர், பிரிவின் பல்வேறு நிலைகளை வைத்துக் கற்பின் பெருமையைக் காட்டுகின்றார். தன் காதலன் எதன் நிமித்தம் பிரிந்தாலும் ஆற்றியிருப்பாள். ஆனால் பரத்தையர் பிரிவை அவளால் ஆற்ற இயலாது. அதனாலேயே ஆற்றுதற்கரிய பரத்தையர் பிரிவை வைத்துக் கற்பின் பொற்பைக் காட்டுகின்றார். அதனாலேயே பரத்த நின் மார்பு நண்ணேன் என்றாள். ஏனெனில் பெண்ணியலார் எல்லாருக்கும் பொது உன் மார்பு. பெண்ணியல்பு என்னும் உறுப்பமைவு ஒன்றினைத் தவிர, கற்பு, நாண் என்பன அற்றவர் பரத்தையர். ஆதலால் பரத்தையரைப் பெண்ணியலார் எனக் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய பெண்டிருள், வரைவின் மகளிர் ஒரு வகை யினர்; ஏனையோர் ஒரு வகையினர். வரைவின் மகளிர் பொருட் பெண்டிர். அவரியல்பு கூறவந்த பரிமேலழகர், தம்

நலத்தை, விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார், ஆகாதார் என்னும் வரைவு இல்லாத மகளிர் எனக் கூறுகின்றார். அதனாலேயே இவர்களின் தொடர்பைக் கடிந்த வள்ளுவர், இவர்களோடான முயக்கம், இருட்டறையில் ஏதில் பிணம் தழீஇ அற்று எனக் கூறுகின்றார். ஆடல், பாடல், அழகு இருப்பதினால், இவர்களிடம் விடுதலறியா விருப்பு ஏற்படுவதற்குக் காரணம் உண்டு. அதனாலேயே இவர்களைப் பிரித்துக் கடிந்து உரைக்கின்றார்.

உலகியல் உணர்ந்து, பொருள் இதுவெனக் கூறிய வள்ளுவர், முகிலுக்குள்ளே பறக்கும் ஒரு கற்பனைவாதி யல்ல. மனிதப் பெலவீனங்களை அவர் ஒப்புக் கொள்கிறார். ஆனால் அவற்றை நியாயப்படுத்துவது அவருடைய நோக்கல்ல. வரைவின் மகளிரைக் கடிந்த அவர், கற்புள்ள மகளிரின் அன்பு நிலையைக் காட்டப் பரத்தையரை ஒரு பகைப் புலமாக்குகிறாரேயன்றி, அவர்களை வரவேற்கிறார் என்று கருதக்கூடாது. வெயிலில் வைத்து நிழலருமை உணர்த்துவது போல, இருளில் வைத்து ஒளியின் பெருமையை உணர்த்துவது போல, பரத்தையிற் பிரிதலை வைத்துக் கற்பின் பொற்புக் காட்டப்படுகின்றது.

ஆடல், பாடல் அழகிற் சிறந்த மாதவிமாட்டு விடுதலறியா விருப்பினன் ஆகிய கோவலனும், கற்பிற் சிறந்த கண்ணகி யினால் தெய்வமானான். இன்றும் ஜெமினிகணேசன் போன்றோர் ஆடல், பாடல் சேர்ந்த அழகியரிடம் காலங் கழித்த பின்னர், தம் உரிமை மனைவியிடம் ஆறுதல் அடைந்திருப்பதைக் காண்கின்றோம்.

வெயிலும் இருளும் உலகியற்கை; தவிர்க்க முடியாதவை; ஆடல், பாடல் வல்ல இவர்களும் தவிர்க்க முடியாதவர்கள்.

ஆனால் பொருட் பெண்டிர் தவிர்க்கப்பட வேண்டியவர். வறுமையற்ற சமுதாய அமைப்பில் இவர்கள் இல்லாதொழிவர். ஆனால் ஏனைய மகளிர் என்றும் இருப்பர்; இருக்க வேண்டும்; ஏனெனில், அவர்களாலேதான் கலைகள் வள்ர்கின்றன. அவர்கள் கலைத் தெய்வங்கள். ஆனால் கலைகள் என்னும் பெயரால் ஆபாசங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். இவற்றில் ஈடுபடும் மகளிர் பணத்தாசையால், கலையை மாசுபடுத்தக் கூடாது. சட்டம் தடுக்க வேண்டும்; சான்றோர் வழிகாட்ட வேண்டும். அத்தகைய சமுதாயத்தில், ஆடவர் மகளிரைக் கூப்பிட மாட்டார்கள்; கும்பிடுவார்கள். கண்ணகிகள் கண்ணீர் சிந்த மாட்டார்கள்; மாதவியும் மணிமேகலையும் துறவு பூண மாட்டார்கள்.

கம்பன், பகல் பகலாக அறிஞரோடு ஆய்ந்து இரவிரவாகப் பாடல்களைப் பாடினானாம். நானும் இரவுகளில் நித்திரையில் அரைத் தூக்கத்தில் சிந்தித்துப் பகலில் எழுதி இந்த நூலை நிறைவு செய்தேன்.

நிறைவாக, தொல்காப்பியர் அக்கால வழக்குக்கு இலக்கணம் படைத்தார். வள்ளுவர் எக்காலத்துக்கும் உரிய இலக்கியம் படைத்தார். எவருமே ஆணாதிக்கவாதி அல்லர்; வர்க்கவாதி அல்லர்; பெண்மையைப் போற்றி இலக்கணமும் இலக்கியமும் படைத்தாரே அன்றி, இழிவுபடுத்தினர் அல்லர். பொருட் பெண்டிர் ஒதுக்கப்பட வேண்டியவர் என்பதிலும், ஆடல் பாடல் வல்ல கணிகையர் போற்றப்பட வேண்டியவர் என்பதிலும் மாறுபட்ட கருத்தில்லை. வர்க்க பேதமும் முதலாளித்துவமும் உள்ள சமுதாயத்தில், கோவலர்களும் பொருட் பெண்டிரும் பரத்தையரும் தோன்றிக் கொண்டே இருப்பர். கணிகையரும், பரத்தையரும் கலைஞர்கள்; ஆனால்

கலைஞர்கள் எல்லாம் கணிகையர், பரத்தையர் அல்லர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் வள்ளுவர் கண்ட வர்க்க பேதமற்ற சமுதாயத்தில், நூறு பத்து அடுக்கி எட்டுக்கடை நிறுத்த வீறு உயர் பசும்பொன் (ஆயிரத்தெண் களஞ்சு பொன்) கொடுக்கும் செல்வக் கோவலரும் இல்லை; அதனைப் பெற்று வாழ வேண்டிய வறிய மாதவியும் இல்லை.

கண்ணகியின் கதையும் காரைக்கால் அம்மையின் கதையும், என் உள்ளத்தை உருக்கிவிட்ட கதைகள். ஒரு வேளை, அவர்கள் பெண்ணாக இருப்பது, ஒரு காரணமாக இருக்கலாம்.

இரண்டு பேருமே தெய்வமாகி விட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கை சராசரி வாழ்க்கையல்ல. அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளும் அவற்றைச் சமாளித்து வெற்றி கொண்டதும், பெண்களுக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் ஒரு படிப்பினை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஔவை துரை சாமிப் பிள்ளை என்னும் செந்தமிழ்ச் சான்றோனிடமும், சிதம்பரநாதன் செட்டியார் என்னும் சீரோனிடமும் சிலம்பு கற்கும் பேறு பெற்றேன்.

முன்னவர் ரசிகக் கடல்; பின்னவர் விமர்சன அலை. கடலிலும் அலையிலும், தோய்ந்து ஆடிய அந்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன.

ஒரு நாள் ஏ.சி.செட்டியார் கொலைக்களக் காதையினைக் கற்பிக்கும்போது, துக்கம் தாளாது, தொடர முடியாமல் எழுந்து போய் விட்டார். வகுப்பில் நிசப்த அலை வீசியது;

மரண அமைதி; வகுப்பு மரண வீடாயிற்று. சாவீட்டிலிருந்து வெளியேறுவது போல், மாணவர்களாகிய நாம் வகுப்பை விட்டு வெளியேறினோம். அப்படித் தமிழ் கற்ற காலமும் ஒன்றிருந்தது. அவ்வளவு ஈடுபாடா? அது சரியா?

பின்னாளில், இலங்கை இந்துக் கலாச்சார அமைச்சில், இந்துக் கலைக் களஞ்சியம் ஆக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, கலாச்சார அமைச்சர் தலைமையில் கேட்போர் கூடத்தில் பேசுமாறு அழைக்கப்பட்டேன். அப்போது நான் தேர்தெடுத்த தலைப்பே 'கண்ணகி சிந்தாத கண்ணீர்' என்பது. பல ஆண்டுகளுக்கு முன் பேசியதை இன்று எழுதத் துணிகின்றேன்.

மனித வாழ்க்கை கண்ணீர்க் கதைதான். அதிலும் பெண்கள் வாழ்க்கை, அதிலும் தமிழ்ப் பெண்கள் வாழ்க்கை, அதிலும் தமிழகப் பெண்கள் வாழ்க்கை! நேரிலே பார்த்த வர்களுக்குத் தான் தெரியும்; அது கண்ணீரா, கண்ணீர்க்கடலா? கண்ணகியைப் பற்றி, சிலம்பைப் பற்றி எத்தனையோ பேர் சிந்தித்துவிட்டார்கள்; சிந்தித்துக் கொண்டேயிருப்பார்கள். கண்ணகி கதை துறவியாகிய இளங்கோவைத் தொட்டதில் என்ன வியப்பு? நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் எனச் சிலம்பு பிறந்ததில் என்ன வியப்பு!

சிலம்பு, கண்ணகி கதையை மட்டும் சொல்லவில்லை. இளங்கோ என்ற துறவியின் மகிமையையும் சொல்கிறது. அது பற்றி ஒரு நூல் எழுதப்பட வேண்டும்.

மதம் முதலிய ஆச்சாரங்களைத் துறந்து, இல்லறத்தாள் ஒருத்தியின் வாழ்வைப் பொருளாக்கி, சான்றோர் இலக்கியம் படைத்த இளங்கோவின் சீவன்முத்த நிலை சிந்திக்கப்பட

வேண்டியது. அந்த நிலையில் நின்றே வள்ளுவனும் கம்பனும் இலக்கியம் படைத்தனர். பாரதி தானும் அத்தகைய சீவன்முத்த நிலையில் நின்றதினாலேயே, அந்த மூன்று நூல்களையும் அமரத்துவம் வாய்ந்தவை என்று கூறினான்.

அடிபட்ட வறுமையில் மரத்துப் போய்விட்ட பெண்மை, தான் பெற்ற பெண் சிசுவின் வாயில் பால் ஊற்றிய வறு முலைத் தாய், கள்ளிப் பாலைப் புகட்டிக் கொல்லும் கொடூரம் நிறைந்திருக்கிறது இன்று.

அதன் மூல காரணத்தை அறியாது, அதனை வேரோடு களையாது, தொட்டில் குழந்தைத் திட்டம், கஞ்சித் தொட்டித் திட்டம், முட்டைப் பிரியாணித் திட்டம் என்பன தீட்டும் அரசியல் வாதிகள் மலிந்த காலம் இது. அன்று மாத்திரம் அல்ல, இன்றும் கண்ணகிகளுக்கு நீதி கிடைக்க வில்லை. வணக்கத்திற்குரிய கண்ணகியை அரசியலாக்கி, சிலைவடித்து, சந்தி சிரிக்கவைக்கும் அரசியல்!

சிலை வடிக்கும் செலவில், கண்ணகி கைத்தொழிற்சாலை என ஒரு குடிசைக் கைத்தொழில் நிறுவி, ஐந்து பெண்களுக்கு வாழ்வு தரலாம் எனக் கூறும், சான்றோரும் உண்டு கொல்! சான்றோரும் உண்டு கொல்!

''ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் சிந்திய கண்ணீர் இந்துமாக் கடலாயிற்று; கடல் உப்பாயிற்று'' என்று கவிதை எழுதலாம். அவர்கள் மனத்தில் அடக்கிச் சிந்தாத கண்ணீருக்குக் கணக்கேது?

என் தாய் சிந்தாத கண்ணீரை மகனாகிய நான் அறியேன்; என் சகோதரி சிந்தாத கண்ணீரைச் சகோதரனாகிய நான்

அறியேன்; என் மனைவி சிந்தாத கண்ணீரைக் கணவனாகிய நான் அறியேன்; என் மகள் சிந்தாத கண்ணீரைத் தகப்பனாகிய நான் அறியேன்; என் உற்றார், உறவினர், ஊரார், உலகார் சிந்தாத கண்ணீரை நான் அறியேன்.

எல்லாப் பெண்களிடமும் நாற் குணமாகிய நாற் படைகளும், ஐம்புலன்களாகிய நல் அமைச்சுக்களும் உண்டு. அவற்றைப் பாதுகாத்துப் பயன்பெற, நம்மில் பலர் அறியவில்லை. பெற்றோர், பிள்ளைகளிடம் அவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். கண்ணகியிடம் அவை வளர்ச்சி அடைந்திருந்தன.

ஒவ்வொரு பெண்ணிடமும் தீ உண்டு. கற்புள்ள பெண்ணின் கண்ணில் ஒரு தீயுண்டு. அவளின் சொல்லில் தீ உண்டு. தீய எண்ணத்தோடு அணுகிய வேடனைப் பார்வையால் தீய்த்து எரித்தாள் தமயந்தி. ஒரு சொல்லினாற் சுடுவேன், தூயவன் வில்லினுக்கு மாசு என்று வீசினேன் என்றாள் சீதை. கண்ணகி மதுரையை அவளது முதிரா முலைமுகத்தெழுந்த தீயாற் சுட்டாள். கண்ணகியின் இந்தக் கொங்கைப் பூசல், அவள் சிந்தையில் அடக்கி வைத்திருந்த சிந்தாத கண்ணீரின் வெளிப்பாடல்லவா? கண்ணினாலோ சொல்லினாலோ சுடாது, முலைமுகத்து மூண்டெழு தீயாற் சுட்டதற்குக் காரணம் என்ன? அது பெண்மைக்கு அடுக்குமா? பெண்ணினத்திற்கே தலைக் குனிவன்றோ என்று கூறுவோர் உளர்!

முதலில் இது சாத்தியமா என்றுகூட வினா எழுப்புவர்.

''முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று'' எனக் கூறும் வள்ளுவர், காமத்தீயின் சால்புக்கு, முலையின்

இன்றியமையாமையை வற்புறுத்துவார். முலைமுகத்து மூண்டெழு தீயை ஊதி ஊதி வளர்க்க வளர்க்க, கருவாயில் காமத்தீ மூண்டெழும். முலைத்தீயை அடக்கிய ஆண் மகனே கருவாய்த்தீயை அடக்க வல்லவனாவான். இதுவே வள்ளுவத்தின் உட்பொருள். கண்ணகி முலையிரண்டும் இருந்தும் அதனால் பயன் பெறாதவள். கோவலன் வேற்று முலை நாடியதால், சிந்தாத கண்ணீரோடு வாழ்ந்தவள்; முலைமுகத்தீயை அடக்கி அடக்கி வாழ்ந்தவள்; காமத்தால் சீரிழந்த கோவலனால் சிறப்பிழந்த கண்ணகி முலைமுகத் தீயால் மதுரையைச் சுட்டாள்.

கண்ணகி வாழ்ந்தது ஒரு புரட்சி.

அவள் மதுரையில் வழக்காடியது ஒரு புரட்சி.

அவள் முலைமுகத்தால் மதுரையைச் சுட்டெரித்தது ஒரு புரட்சி.

வெட்டுண்ட கணவனை அவள் தழுவ அவன் எழுந்தது ஒரு புரட்சி.

இத்தனையும் கற்பின் பொற்பால் விளைந்த புரட்சிகள்.

அன்று கோவலன் என்ற ஒருவன், நாடக நடிகை பின் போனான். இன்று தமிழகமே சினிமா நடிகையர் பின் போகிறது; அவர்களுக்குக் கோயில் கட்டிக் கும்பிடுகின்றது!

இத்தகைய சிந்தனைகள் எல்லாம் என்னைப் பேச வைத்தன; எழுத வைத்தன; சிலம்பைப் பரீட்சைக்குப் படித்தபின், பல முறை படித்து விட்டேன். இதனை எழுது வதற்காகவும் படித்தேன். இளங்கோ என்னும் துறவோனின்

இராச கம்பீரத்தை 'திங்களைப் போற்றும்' எனத் தொடங்கும் மங்கள வாழ்த்திலிருந்து, வரந்தரு காதை வரை கண்டு களிக்க வாருங்கள். 'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்' எனக் கூறிய பாரதி, இந்த இராச கம்பீரத் தமிழ்க் கம்பீரச் செய்யுள் நடையையும் உட்கொண்டே கூறியிருப்பான்.

அன்பர்களே!

சிந்தித்ததை எழுதினேன். உங்கள் சிந்தனையை இது தூண்டுமானால் அதுவே என் நிறைவு.

**வித்துவான் க.ந.வேலன்**

# மதிப்புரை

உரை இடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகாரத்தைக் குறிப்பதுண்டு. இங்கே செய்யுள் என்பதை உரைநடைக்கு எதிரான பாட்டு நடை என்று கருதக்கூடாது. பொருள் அதுவாயின், பாட்டுடைச் செய்யுள் என்ற சொற்றொடரில் வருகின்ற 'பாட்டுடை' என்ற சொல்லுக்குப் பொருள் இல்லாது போய் விடும். ஆகவே இங்கே 'செய்யுள்' என்னும் சொல்லுக்கு வேறொரு கருத்து இருத்தல் வேண்டும்.

**'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'** என்று இளங்கோ கூறுகின்றார். பாட்டையோ செய்யுளையோ ஒருவர் நாட்டுவதில்லை. ஒரு கருத்தை, கொள்கையை ஒருவர் நாட்டுதல் உண்டு; அதாவது நிலை நாட்டுதல், நிலை நிறுத்தல் உண்டு. ஆகவே இங்கே செய்யுள் என்பது வெறுமனே உரைநடையினின்றும் பிறிதான பாட்டு நடையைக் குறிக்காமல் வேறொன்றைக் குறிக்கின்றது என்று கோடலே முறை.

'தமிழச் சாதி' என்ற தலைப்பில் அமைந்த கவிதையைப் பாடிய பாரதியார், 'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்' என்று கூறுகின்றார். இங்கும், 'செய்யுள்' என்ற சொல் மரபுக்குப் பிறிதான பொருளிலேயே கையாளப்பட்டிருக்கிறது. இந்தச் சிந்தனைகள் எல்லாம் வித்துவான் வேலன் அவர்களின் சிந்தனையைக் குடைந்திருப்பதாகத் தெரிகின்றது. இந்தக்

குடைச்சலின் வெளிப்பாடு, "**கண்ணகி சிந்தாத கண்ணீர்**" என்ற அவரது நூலில் சிந்தி வழிந்து ஓடுவதைக் காண்கின்றேன்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும் என்பதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர் என்பதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்தான் சிலப் பதிகாரத்தின் செய்யுள், உள்ளுறை, மெய்ப்பொருள், செய்தி என்பதை ஆணித்தரமாக நிலைநாட்டுகின்றது இந்த நூலின் முதலாவது பகுதி. அவற்றுள்ளும் ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதே முதன்மையான செய்தி என்கிறார் நூலாசிரியர். அதனை ஆசிரியர் நிலை நாட்டுகின்ற இலக்கிய முறை இன்பம் பயக்கின்றது.

எல்லாச் செயலிலும் அளவு என்ற ஒன்றைக் காட்டி நிற்கின்ற சிலம்புப் பாத்திரம் கண்ணகி. எது அளவாக் உள்ளதோ அதுதான் அழகாகவும் இருக்கும். சொல்லின் செல்வன் என்று அனுமனைக் கம்பன் காட்டுவான். சிலப்பதிகாரத்தில் கண்ணகியைச் சொல்லின் செல்வி என்று போற்றல் சாலும். வினவினாலன்றி முத்துறக்கிளக்காத பண்பு அனுமனுக்கு அமைந்தது! அதைவிட மேன்மையான பண்பு கண்ணகிக்கு இயைந்தது. கண்ணகியைப் பற்றிச் சிந்தித்தால், அவள் அடக்கமாக உதிர்த்த சொற்களை எண்ணினால், '**பீடன்று**', '**சிலம்புள கொண்ம்**', '**போற்றா ஒழுக்கம் புரிந்தீர்**' என்ற குறும் சொற்றொடர்கள்தான் மனக்கண் வந்து நிற்கும்.

உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத் தெளியக் காட்டி மற்றவர்களின் உணர்ச்சிகளைத் துள்ளிவிடக் கூடாது என்பதால்,

சொற்காத்துச் சோர்விலாமல் வாழ்ந்தவள் கண்ணகி; வள்ளுவன் குறளுக்கு இலக்கியமாக இருப்பவள் கண்ணகி; அதாவது, தற்காத்து - தற்கொண்டாற் பேணி - தகைசான்ற சொற்காத்து - சோர்விலாத பெண்ணாக வாழ்ந்தவள் கண்ணகி. தற்கொண்டானைப் பேண வேண்டும் என்ற நோன்பு பூண்டிருந்ததால் ஆயிரம் பேச வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த நிலையிலும் நாகாத்துச் சாகாப்புகழ் ஈட்டினாள் கண்ணகி. வாயைத் திறந்து தனது உளநோயை யார்க்குரைத்தாலும் அது தனது கணவனின் உளத்தைக் குழப்பி விடும் என்பதுணர்ந்து சொற்காத்த பெருமைக்குரியவள் அந்தக் கற்பின் செல்வி.

சொல்லால் சொல்ல வேண்டியவற்றைக்கூடக் கண்ணீரால் சொல்லுவது சாதாரண பெண்ணீர்மை. கண்ணகி சாதாரணப் பெண்ணல்லவே! அவள் சொற்காத்தது போலவே, கண்ணீரையும் காத்து, கண்ணீர் சிந்தாமல் தனித்து வாழ்ந்தாள். அவள் கண்ணீர் சிந்திய இடங்கள் சிலவற்றை இளங்கோ குறிக்கத் தவறவில்லை. கண்ணீர் சிந்தியிருக்க வேண்டிய இடங்கள் பல கண்ணகியின் வாழ்வில் இருந்தன. ஆனால் அந்த இடங்கள் எல்லாவற்றையும் துலாம்பரமாகச் சுட்டிக் காட்டுவது கவிநயத்துக்கு இழுக்கென்று கருதிப் போலும் இளங்கோ அடிகள் அவற்றை அழுத்திச் சொல்லாமல் சிலம்பின் கதையை நடத்திச் செல்கிறார்.

கண்ணகி உகுத்த கண்ணீர் பற்றி இளங்கோ அடிகள் காட்டுகின்ற துலாம்பரமான கட்டங்கள் மிகச் சிலவே.

கலங்காது வாழ்ந்த கண்ணகியின் உள்ளக் கலக்கத்தைக் கொலைக்களக் காதையிலேதான் முதன் முதலாகக் காண்கின்றோம்:

*''வழுவெனும் பாரேன்*
*மாநகர் மருங்குஈண்டு*
*எழுகென எழுந்தாய்*
*என் செய்தனை நீ''*

என்று கோவலன் கவலையோடு கேட்ட கேள்விக்கு அவள் சொன்ன மறுமொழியிலேதான் அவளுடைய கவலைகளைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார் இளங்கோ அடிகள் அங்கேதான் அவர் அவளை அதிகம் பேசவும் வைக்கிறார்:

*''அறவோர்க்கு அளித்தலும்*
*அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க்கு எதிர்தலும்*
*விருந்தெதிர் கோடலும்*
*இழந்த என்னை*
..........................................
..........................................
..........................................
*அன்புள்ளம் சிறந்தாங்கு*
*அருள் மொழி அளைஇ*
*எற்பாராட்ட*
*யான் அகத்து ஒளித்த*
*நோயும் துன்பமும்*
*நொடிவது போலும் என்*
*வாய் அல் முறுவற்கு*
*அவர் உள்ளகம் வருந்தப்*
*போற்றா ஒழுக்கம் புரிந்தீர்''*

என்று அவள் கூறிய மறுமொழியிலேதான் அவளுடைய கவலைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இளங்கோ அடிகள்.

அடுத்து, கண்ணகி வெளிப்படையாகச் சிந்திய கண்ணீரைத் 'துன்ப மாலை'யிலே படிக்கின்றோம்:

*''பொங்கி எழுந்தாள்*
*விழுந்தாள் பொழிகதிர்த்*
*திங்கள் முகிலொடும்*
*சேணிலம் கொண்டெனச்*
*செங்கண் சிவப்ப அழுதாள்*
*தன் கேள்வனை*
*எங்கணாஅ என்னா*
*இனைந்து ஏங்கி*
*மாழ்குவாள்''*

என்று ஏங்கி அழுதாள் கண்ணகி.

இதன் பின்னர் 'ஊர்சூழ்வரி'யிலே கண்ணகியின் கண்ணீர்க் கவலையை ஒளிவு மறைவின்றிக் காண்கிறோம்:

*''பட்டேன் படாத துயரம் படுகாலை*
*உற்றேன் உறாத்துயரம் உறுவனே ஈதொன்று''*

என்று கண்ணகி உரைக்கின்றபோது அவள் உகுத்த கண்ணீரைக் காணாமல் காண்கிறோம்.

*''அல்லல் உற்று ஆற்றாது அழுவாளைக்*
*கண்டு ஏங்கி மல்லல் மதுரையார்*
*எல்லாரும் தாம் மயங்கி''*

என்ற கவிக்கூற்றின் மூலம் கண்ணகி அல்லற்பட்டு ஆற்றாது அழுதாள் என்று இளங்கோ அடிகள் கூறுகின்றார்.

வெட்டுண்டு கிடந்த கோவலனைக் கண்ட கண்ணகி -

*''கண்பொழிபுனல் சோரும்*
*கடுவினை உடையேன்முன்*

*புண் பொழிகுருதியிராய்ப்*
*பொடியாடிக் கிடப்பதோ''*

என்று கூறுவதினின்றும் அவள் கண்ணீர் உகுத்தாள் என்று அறிகின்றோம்.

'ஊர்சூழ்வரி'யிலே ''தெய்வமும் உண்டுகொல், வைவாளின் தப்பிய மன்னவன் கூடலில் தெய்வமும் உண்டு கொல் தெய்வமும் உண்டுகொல்'' என்று வினவுவதன் மூலம் கண்ணகி கண்ணீர் சிந்தினாள் என்று காட்டுகின்றார் இளங்கோ.

தெய்வத்திடம் அழுது முறையிட்ட கண்ணகி, பாண்டியனிடம் முறை கேட்கப் போனபோதும் ''நெடுங்கயற்கண் நீர் சோரப் போனாள்'' என்கிறார் சிலம்பாசிரியர்.

வழக்குரை காதையில், பாண்டியன் முன்னே சென்ற கண்ணகியைப் பார்த்து ''நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய்; யாரையோ நீ; மடக்கொடியோய்'' என்று பாண்டியன் அழைப்பதிலிருந்து, கண்ணகி அழுதழுதே அரசனிடம் போனாள் என்பது தெரிகிறது.

மேலே காட்டியவை எல்லாம், சிலப்பதிகாரத்தில் கண்ணகி வெளிப்படையாகவே கண்ணீர் சிந்திய காட்சிகள். ஆனால் அவள், சிந்த வந்த கண்ணீரைச் சிந்தாமல் தடுத்து வைத்த இடங்களும் கட்டங்களும் பல. அவற்றை உய்த்துணரும்படி விட்டிருக்கிறார் இளங்கோ அடிகள். காப்பியச் சிறப்பு மிக வேண்டும் என்பதற்காகவும், கண்ணகியின் பெண்மை பரிணமிக்க வேண்டும் என்பதற்காகவும், இளங்கோ அவ்வாறு உய்த்துணரவைத்து நெஞ்சை அள்ளும் வண்ணம் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியிருக்கிறார்.

தமிழைச் சாகாமல் வைத்திருக்கும் காயகல்பமாகச் சிலப்பதிகாரம் அமைந்திருக்கிறதென்று பாரதியார் புகன்ற பின்னரும்கூட, கண்ணகி சிந்தாத கண்ணீர் என்ற வெண்ணையைச் சிலப்பதிகாரப் பாலிலே கடைந்தெடுத்துக் கவியின் உளங்காண இக்காலத் தமிழர் தவறி விட்டனர். இந்தத் தவற்றை உணர்ந்த வித்துவான் வேலன் அவர்கள் இளங்கோ என்ற மாபெரும் கவியின் உள்ளத்தை உலகத்துக்கு உணர்த்துவதற்காகவும், பெண்ணின் பெருமையை மீண்டும் வலியுறுத்தவும் ''கண்ணகி சிந்தாத கண்ணீர்'' என்ற இந்த அரிய நூலை ஆக்கி அளித்திருக்கிறார். அது தமிழினம் செய்த தவப் பயன்.

கண்ணகி என்ற பெண்ணின் பெருமையை விளக்க வந்த வித்துவான் வேலன் அவர்கள் ஆங்காங்கே தமிழினத்துக்கு இன்றைக்குத் தேவையான அறிவுரைகள் பலவற்றையும் தூவி இருக்கிறார் இந்த நூலில். பெண்ணியல்வாதிகளின் போலித்தனம், ஆறிய கற்பு, சீறிய கற்பு, சான்றாண்மைக்கும் பண்புடைமைக்கும் இடையிலான வேறுபாடு, இன்றைய தமிழ்ச் சமுதாயச் சீர்கேடுகள், தமிழகத்து அரசியல், தமிழகத்துப் பெண்களின் நிலை, ஈழத்தமிழ்ப் பெண்களின் வீரம், ஆட்படும் அன்பு, ஆட்படுத்தும் அன்பு, யதார்த்தவாதம் என்று பல விடயங்கள் பற்றிப் பொருளொடு புணரும் வண்ணம் எழுதியிருக்கிறார். அவருடைய எல்லாக் கருத்துக்களையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை; ஏற்க வேண்டும் என்று எண்ணும் இயல்பும் அவரிடமில்லை. கண்ட பாட்டுக்குக் கொண்டை முடிக்க நினைக்கின்ற தமிழுலகம் சிந்திக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

இந்த நூல் சின்ன நூலானாலும் பொன்னான நூல் என்று பாராட்டத்தக்க ஆராய்ச்சி நூல். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண வேண்டியது அறிஞர் கடன்.

நிறைவாக ஒன்று. இப்படியான ஓர் அரிய இலக்கிய நூலுக்கு மதிப்புரை எழுதும்படி வித்துவான் வேலன் அவர்கள் என்னைப் பணித்தபோது பயந்து தயங்கினேன். மாணவனும் மதிப்புரை வழங்கத்தக்கவனே என்று கூறி இசைய வைத்தார். அவர் அருகே இருந்து அடிக்கடி அவரது கருத்துக்களைப் ப்கிர வாய்ப்புப் பெற்றவன் நான். அந்தத் தகுதி ஒன்றே இதை எழுதுவதற்கு எனக்கு இருக்கின்ற தகுதி. என்னையும் பொருட்டாக நினைத்த வித்துவான் வேலன் அவர்கட்கு எனது நன்றிகளும் வாழ்த்துக்களும். வேலனைப் புரிந்து கொள்வது இயலாதது. அவரது ஆக்கங்களும் அத்தகையனவே. இருப்பினும் அவரது கவியுளத்தைக் காண முயன்றிருக்கிறேன். கானமுயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது என்ற ஆறுதல் எனக்கு.

சங்கத் தமிழோடு சந்தைத் தமிழ் என்ற பாமரர் தமிழும் உரைத்துப் பண்டைத் தமிழியத்தைப் பாரறியப் பண்ணிய இலக்கியக் கலைஞரும் அரசியல் சிந்தனையாளனும் ஆகிய வித்துவான், முனைவர் க.ந.வேலன் அவர்கள் நுணுகி ஆய்ந்து ஆனந்தித்து எழுதிய கண்ணகி சிந்தாத கண்ணீருக்கு மதிப்புரை எழுதப் புகுந்ததன் மூலம் எனது சிற்றறிவினையும் சிறிது விரிவுபடுத்திக் கொண்டேன்.

கண்ணகி சிந்தாத கண்ணீரை வாசகர்கள் சிந்த வேண்டும் என்று விரும்பி, நூலிலே துலக்கப்பட்டிருக்கும்

வைரங்களாகிய பரற்கற்கள் பற்றி எதையும் விரித்தெழுத விழையவில்லை நான். நீங்களே வாசியுங்கள். இலக்கிய நயத்தில் தோய்ந்து மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சிந்துங்கள்!

- செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, B.Sc., LL.M.
வழக்கறிஞர்
Chelvathamby & Sons, Solicitor
392, ILFORD LANE, ILFORD, ESSEX
Tel. : 0208 478 5476
0208 590 9905

## நன்றி

இருப்பதற்கு இல்லம் உதவி, எழுதுவதற்குக் கோலும் தாளும் தந்து, என் கிறுக்கல் கையெழுத்தைத் தன் மதிநுட்பத் தாலும், நூலறிவாலும் நுனித்து அறிந்து திருத்தித் தட்டச்சு செய்வித்து தந்ததோடு, சிறப்பான ஒரு மதிப்புரையையும் வழங்கி இந்தச் சிந்தாத கண்ணீரைச் சிறப்பித்துள்ள இலக்கிய ஆர்வலரும் சிலம்பின் வஞ்சிக் காண்டத்திற்கு நெஞ்சைப் பறி கொடுத்தவரும் தமிழ்க் காவலரும் சட்ட வல்லுநரும் ஆன செல்லத்தம்பி சிறீக்கந்தராசா B.Sc., LL.M., Advocate (Sri Lanka) Solicitor (England & Wales), அவர்கட்கு எனது உளம் நிறைந்த நன்றிகள்.

**வித்துவான் க.ந.வேலன்**

# உள்ளடக்கம்


என் உரை

மதிப்புரை


## பாகம் - 1

## சிலப்பதிகாரச் செய்தி


| | | |
|---|---|---|
| 1. | நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் | 35 |
| 2. | பாரதி பார்த்த பார்வை | 36 |
| 3. | சிலப்பதிகாரம் போற்றிய விழுமியங்கள் | 37 |
| 4. | அரசியல் என்றால் என்ன? | 38 |
| 5. | இரணியனை அறம் கொன்றது | 38 |
| 6. | நெடுஞ்செழியனைக் கொன்றது யார்? | 39 |
| 7. | தனக்குத் தானே எழுதிய தீர்ப்பு | 40 |
| 8. | ஆய்ந்து ஓய்ந்து பார்க்க வேண்டும் | 40 |
| 9. | கண்ணகி என்ற தர்மதேவதை | 43 |
| 10. | பாண்டியன் அநீதியாளனா? | 44 |
| 11. | அறம் தவறிய முடிமன்னரும் இருந்தனர் | 45 |
| 12. | பாண்டியர் நீதி | 45 |
| 13. | ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் | 46 |
| 14. | எய்தவன் இருக்க அம்பை நோவதோ? | 48 |

15. தருமம் என்று ஒரு பொருள் உளது 49

16. மதுரையை எரித்தது முறையா? 50

17. அறம் தவறிய அறிஞர்கள் 50

18. சடாயு போதித்த அறம் 51

19. இரக்கம் அற்ற மதுரை மாந்தர் 52

20. மதுராபதி உரைத்த உண்மை 53

21. கோல் கோடியது ஏன்? 54

22. சிலப்பதிகாரச் செய்யுள் மூன்றும் மூவாஉண்மைகள் 54

23. கண்ணகி பொறுப்பல்ல 55

24. கண்ணகியின் தெய்வாம்சம் 56

25. மாதரியின் மாண்பு 56

26. வன்பழி தூற்றிய மாமதுரை மக்கள் 57

27. ஆண்மையற்ற நீதிமான்கள் 58

28. வீடுமனும் தரம் தாழ்ந்தான் 58

29. மதுரையை எரித்தது கொடும் செயல் அன்று! 59

30. அரசியல் பிழைத்ததன் விளைவு 60

31. தமிழ்த் தத்துவ ஞானிகளும் கிரேக்கரும் 60

## பாகம் - 2

# கண்ணகி சிந்தாத கண்ணீர்

| | | |
|---|---|---|
| 32. | பெண்களின் ஏக்கம் | 63 |
| 33. | இக்காலப் பெண்ணியல்வாதிகள் | 64 |
| 34. | பொறுக்கவேண்டிய இடத்தில் பொறுத்த கண்ணகி | 64 |
| 35. | கண்ணகி அடக்கிய கண்ணீர் மடை உடைந்தது | 66 |
| 36. | சிந்திய கண்ணீர் சொல்லும் சிந்தாத கண்ணீர் | 67 |
| 37. | கண்ணகி சகித்த கவலைகள் | 69 |
| 38. | கண்ணகியின் பொறுமையைப் பறித்த நிகழ்ச்சிகள் | 69 |
| 39. | கண்ணீர் மறைத்த கண்ணாள் | 72 |
| 40. | கண்ணகி செய்த புரட்சி | 73 |
| 41. | தெய்வம் தொழாத கண்ணகி | 74 |
| 42. | கண்ணகி ஒரு புதுமைப்பெண் | 74 |
| 43. | தாயாய் மாறிய கண்ணகி | 75 |
| 44. | கண்ணகி அறிவற்ற பெண்ணா? | 77 |
| 45. | கோவலனை உருக்கிய கண்ணகி | 78 |
| 46. | ஆட்பட்டு ஆனந்தித்த கண்ணகி | 79 |

47. ஊர்சூழ்வரி அவள் சிந்தாமல்
சிந்திய கண்ணீர் 80

48. கற்புடை மகளிரின் தீ 81

49. பெண் நிலைவாதிகளின் கூச்சல் 83

50. ஆறிய கற்பும் சீறிய கற்பும் 83

51. திருக்குறளும் கண்ணகியும் 85

52. சிலம்பு காட்டும் மதுரையும்
இன்றைய தமிழகமும் 87

53. துரோணர் உத்தமரா? 87

54. அடக்கம் அமரருள் உய்க்கும் 88

55. பண்புடையாராலேதான்
உலகம் இயங்குகிறது 89

56. பெண்கள் ஏன் துறவு பூணவில்லை? 90

57. சமுதாயச் சீர்கேடுகளை
நியாயப்படுத்தலாமா? 91

58. யதார்த்தத்தை நாகரிகமாகச்
சொல்ல முடியாதா? 92

59. தமிழகத்துப் பெண்கள்
கொதித்து எழாதது ஏன்? 92

60. ஈழத் தமிழ்ப் பெண்களின் போராட்டம் 93

61. கண்ணகியும் இலங்கை மக்களும் 94

# பாகம் - 1

# சிலப்பதிகாரச் செய்தி

## நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் 1800 ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை. நெஞ்சை அள்ளும் இக்கதையினைச் செவியுற்ற இளங்கோ அடிகளால் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகப் பாடப்பட்ட கதை. சிலப்பதிகாரத்தைப் பற்றி இதுவரை, எண்ணூறுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. அவற்றுள் பல, கண்ணகி என்னும் கற்புத் தெய்வத்தைப் பற்றியனவே. சங்க கால இலக்கியத் தளத்தில், காலநிலைக்கேற்ற மாற்றங் கொண்டு தமிழில் எழுந்த முதற் காப்பியம் சிலம்பாகும். இந்நூல், மூவேந்தரையும் அவர் ஆண்ட நாடுகளையும் இணையச் செய்து, குடிமகள் ஒருத்தியைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட பெருமையுடைய தென்பது ஆன்றோர் கருத்து.

பொதுவாக உலகிலுள்ள பேரிலக்கியங்களெல்லாம், கிராமிய, நாட்டார் வழக்காக ஊற்றெடுத்துச் சான்றோர் இலக்கியங்களாக வளர்ந்த நிலைக்கு மாறாகச், சிலம்பின் கதையானது, எடுத்த எடுப்பிலேயே சான்றோர் இலக்கியமாக, இளங்கோ அடிகளால் பாடப்பெற்ற பெருமையுடையது. சிலப்பதிகாரம் தோன்றிய பின், சிலம்பின் கதை மக்கள் மனப்பாங்கிற்கேற்பக் கோவலன் கதையாகவும், கண்ணகி

கதையாகவும், கண்ணகி புராணமாகவும் பல கிராமிய நாட்டார் வடிவங்களைப் பெற்றுள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே, தண்டமிழின் மேலாந்தரம் இவை இவை எனச் சான்றோர் சில நூல்களைக் குறிப்பிட்டு, விதந்து பாடியிருக்கிறார்கள். திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருக்கோவையார், சிவஞான சித்தியார் என்பன அவற்றுட் சில.

**பாரதி பார்த்த பார்வை**

இவ்வகையில், பாரதியும் மூன்று நூல்களைக் குறிப்பிட்டு, அவை தமிழினத்துக்கு அமரத்தன்மை நல்கும் நூல்கள் எனப் புகழ்ந்து கூறுகின்றான்.

தமிழர் ஒரு சமுதாயம், ஆனால் சமுதாய உணர்வற்ற ஒரு சமுதாயம். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியானாலும், பல்லாயிரம் ஆண்டு வாழ்ந்த வாழ்க்கை அனுபவம் உடையதானாலும், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமும், மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கமும் மாறாத சமுதாயம்.

இந்தச் சூழலில், சமுதாய உணர்வின் உருவாக அவதரித்த ஞானக்கவி பாரதி, தமிழ்ச் சாதியின் சீர்கெட்ட நிலை கண்டு நெஞ்சு பொறுக்காத பாரதி, விதியைப் பார்த்துக் கேட்கின்றான்: 'விதியே விதியே தமிழச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா? ஏனெனில் திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகிய மூன்று நூல்களும் இருப்பதினால் தமிழ்ச் சாதி அமரத்தன்மை வாய்ந்ததென்று கருதியிருந்தேனே' என்கிறான்.

எனவே, தமிழினம் அழியாமற் காக்கும் சக்திவாய்ந்தவை இம் மூன்று நூல்களும் என்பது பாரதியின் திடமான நம்பிக்கை.

பாரதி பாடுகிறான் :

*'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும் எல்லை ஒன்றின்மை எனும் பொருளதனைக் கம்பன் குறிகளாற் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச் சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்.'*

சிலப்பதிகாரம் என்று கூறாமல், சிலப்பதிகாரச் செய்யுள் என்று கூறுகின்றான். அந்தச் செய்யுள் எங்ஙனம் அமரவாழ்வு கொடுக்கும்? திருக்குறளில் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் இருப்பதினால், அது அமரவாழ்வு கொடுக்கும். கம்பன், எல்லை ஒன்று அற்ற பொருளைக் குறிகளால் காட்ட முயல்வதனால், அது அமரவாழ்வு கொடுக்கும். இங்ஙனம் இரு நூல்களையும் விரித்துக் காரணம் கூறியவன், சிலப்பதிகாரச் செய்யுள் எனச் செப்பக் காரணம் ஒன்று இருக்க வேண்டும். அதுவும் ஆழமாக இருத்தல் வேண்டும்.

### சிலப்பதிகாரம் போற்றிய விழுமியங்கள்

சிலம்பினுள்ளே பொதிந்து போற்றப்பட்டுள்ள செய்-உள்-பரல் எது? அதுவே செய்யுள். சிலப்பதிகாரமாகிய சிலம்பினுள், மூன்று மாணிக்கப்பரற் கற்கள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழினம் உணர்ந்து போற்றுமானால், தமிழினம்

வாழும், அமரத்தன்மை பெறும் என்பது பொருளாகும். இந்தப் பரற்கற்களே சிலம்பின் பாவிகமாகும். அவையே சிலம்பு கூறும் செய்திகளாகும்.

பாரதி 'செய்யுள்' என்னும் சொல்லால் குறித்த பரற்கற்கள் :

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்;
2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்;
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்;

எனும் மூன்றுமாகும்.

## அரசியல் என்றால் என்ன?

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனும் தொடரில் உள்ள 'அரசியல்' என்னும் சொல்லானது, அரசியல் விஞ்ஞானத்தையோ அதனோடு தொடர்புடைய பொருளையோ குறித்து வந்ததல்ல; இங்கு, அரசியல் என்பது நீதியை, அறத்தைக் குறித்து நிற்கின்றது. இது அந்தக் காலத்தில் சிறப்பாக அரசனுக்குச் சொல்லப்பட்ட அறமானாலும், இன்றைய அமைச்சர்களுக்கும் அதிகாரி களுக்கும், பொதுவாக ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சொல்லப்பட்ட அறமாகவே கொள்ள வேண்டும்.

எனவே, அறம் பிழைத்தவர்களைக் காத்தலைச் செய்யும் அறக்கடவுளே கூற்றாக நின்று அழிக்கும்; இந்த உண்மையே தமிழிலக்கியத்தின் ஊடுபொருளாகத் தமிழர் சிந்தனையின் பாவிகமாக மிளிர்கிறது.

## இரணியனை அறம் கொன்றது

இரணியனின் வரபலத்தினால் அவனுக்குச் சாவு, பகலில் வர முடியாது; இரவிலும் வர முடியாது. அவனுக்கு மரணம்

மனிதராலும் இல்லை; மிருகங்களாலும் இல்லை. இந்த வர பலம் அவனை ஆணவக்காரனாக்கி அரசியல் (அறம்) பிழைக்கச் செய்தது. அவனை எதிர்க்கும் சக்தி அவன் காலத்தில் யாருக்கும் இருந்ததில்லை. 'இரணியாயநம' என்று சான்றோராகிய குருவும், பயத்தினால் சொல்லத் தொடங்கி விட்டார். இந்த நிலையில் தான், அவன் வயிற்றில் அவனை அழிக்க ஒரு கரு தோன்றிற்று.

பகலும் இரவும் மயங்கும் மாலைப்போதில், அறமானது நரசிங்க வடிவமாகக் கூற்றாக வந்து குடலைக் கிழித்துக் கொன்றது. இந்தக் கோரக் கொலையைத் தூண்டிய சக்தி அவன் வயிற்றுக்கரு, பிரகலாதன். இது புராணகாலச் செய்தி.

இந்த நூற்றாண்டில், அப்படியான மாமனிதன் ஓர் இராணுவ சர்வாதிகாரி. பூமியில் அவனுக்கு இல்லாத பாதுகாப்பு இல்லை. அவன் நாட்டில் தேர்தல் இல்லை. நிலத்தில் அவனை அழிக்க வாய்ப்பில்லை. அறம் அவனை வானூர்தியில் வைத்துச் சந்தித்தது.

பிரான்சு நாட்டில் ''பாண்'' கேட்ட ஏழைக்குக் ''கேக்' சாப்பிடுங்கள் என்று கூறினாள் மமதை பிடித்த Mary Antoinette என்ற அரசி. சமயமுள படிக்கெல்லாம் அறம் கொன்ற சுமடன் ஆன சார் மன்னனுக்கு நடந்ததென்ன?

## நெடுஞ்செழியனைக் கொன்றது யார்?

பாண்டியன் நெடுஞ்செழியனை யாரும் கொல்லவில்லை. அவன் தானே தற்கொலை செய்து கொண்டான். 'பொன்செய் கொல்லன், தன்சொல் கேட்ட யானோ அரசன், யானே கள்வன்; கெடுக என் ஆயுள்' எனத் தன் குற்றம் உணர்ந்த செழியன் தற்கொலை செய்து கொண்டான்.

## தனக்குத் தானே எழுதிய தீர்ப்பு

'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று வெள்வேல் கொற்றம்' எனக் கோவலன் கொலைக்குக் காரணம் கூறிய செழியன், தன் தவற்றினை உணர்ந்தபோது 'யானே கள்வன்' என்றான். அவன் களவெடுக்கவில்லை. தான் அரசியல் பிழைத்ததால் தன்னைக் கள்வன் என்கிறான். கோவலனுக்குத் தண்டனை தந்த செழியனுக்கு யார் தண்டனை தருவது? எனவே தனக்குத் தானே தண்டனை தந்தான். தனக்குத் தான் வழங்கிய தீர்ப்பே 'கெடுக என் ஆயுள்' என எழுதப்பட்டது. எழுதிய தீர்ப்பு உடனேயே நிறைவேற்றப்பட்டும் விட்டது. இறக்குமுன் பாண்டியன் கூறிய இறுதி வாசகம் இவை:-

*'பொன் செய் கொல்லன் தன்சொல் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்*
*மன்பதை காக்கும் தென்புலங் காவல்*
*என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்.'*

இவற்றைக் கூறும்போதே மயங்கிய மன்னன் அரியணையில் வீழ்ந்து மாண்டான்.

அமைச்சரோடு ஆய்ந்து வழங்கவேண்டிய தீர்ப்பினை,

*'ஈங்கு என், தாழ் பூங்கோதை தன்காற் சிலம்பு*
*கன்றிய கள்வன் கைய தாகில்*
*கொன்று அச்சிலம்பு கொணர்க'*

எனத் தீர்ப்பு வழங்கி விட்டான்.

## ஆய்ந்து ஓய்ந்து பார்க்க வேண்டும்

ஆய்ந்தும் ஓய்ந்தும் பாராதான் செயல் சாந்துணையும் சஞ்சலம் தரும் என்னும் விதியினை அரசன் மறந்துவிட்டான்.

சட்ட வல்லுநரோடு ஆய்ந்தும் செயற்படவில்லை; தீர்ப்பு வழங்குவதற்கு முன் காலம் நீட்டித்து ஓய்ந்தும் செயற்பட வில்லை. நீதி மன்றங்களில் வழக்குகள், பல நிலைகளில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதனையும், தீர்ப்பு வழங்குதலில் காலம் நீடித்துச் செல்லுதலையும் இன்றும் காணலாம். இதுவே ஆய்ந்து ஓய்ந்து செய்தலாகும்.

பாண்டியன் ஆய்ந்து ஓய்ந்து பாராமைக்குக் காரணம், அவனது காம மயக்கமேயாகும். இன்ப விருப்பு மிகுதியும் உடையவர் அறத்தையும் பொருளையும் இழப்பர் என்னும் அறநூல் விதிக்கு இலக்கானவர் இருவர். அவர்கள் கோவலனும் பாண்டியன் நெடுஞ்செழியனுமாவர். மூவேந்தரும், மன்னர் பின்னோர் என மதிக்கப்பட்ட பெருங்குடி மக்களும் வாழ்ந்த களியாட்ட வாழ்க்கையே தமிழினத்தின் அழிவுக்குக் காரண மாகும்.

பாண்டியனது உள்ளம் ஆடல் மகளிரின் இன்ப மயக்கத்தில் ஆழ்ந்திருப்பதை அறிந்த அவன் தேவி ஊடினாள்.

*'கூடல் மகளிர் ஆடல் தோற்றமும் -*
*பாடற்பகுதியும், பண்ணிய பயங்களும்,*
*காவலன் உள்ளம் கவர்ந்தன என்று, தன்*
*ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்துத்,*
*தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டுக்,*
*குலமுதல் தேவி கூடாது ஏகினள்'*

என்கிறார் இளங்கோ அடிகள்.

அவளின் ஊடலைத் தீர்த்துக் கூடும் வேட்கையோடு இருந்த மன்னன், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் மனநிலையை இழந்து விட்டான்.

இந்நிலையிலேயே அவன்,

*'என் தாழ்பூங்கோதை தன்காற் சிலம்பு*
*கன்றிய கள்வன் கைய தாகில்*
*கொன்றச் சிலம்பு கொணர்க'*

எனத் தீர்ப்பு எழுதிவிட்டான். சமன் செய்து சீர்தூக்க வேண்டியவன், காமவசத்தால் சமநிலையற்றிருந்த நேரத்தில், குற்றமற்ற ஒருவனைக் கொல்லும் தீர்ப்பை வழங்கிவிட்டான்.

மன்னோர் பின்னவனாக வாழ்ந்த கோவலன், கழி காமத்தால் வறிஞனாகி மதுரையில் மாண்டான். பாண்டியன் தன் தவற்றை உணர்ந்ததும் தனக்குத் தானே தண்டனை வழங்கியதும் சான்றோர் போற்றும் தகையதே. இச்செயல் தனைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் :-

*'எம்மோரன்ன வேந்தர்க்கு உற்ற*
*செம்மையின் இகந்த சொல் செவிப்புலம் படாமுன்*
*உயர்பதிப் பெயர்ந்தமை உறுக'*

என்றான். அதாவது நீதி தவறியதால் உண்டான பழிச்சொல், ஏனைய மன்னரின் செவியில் படுவதற்கு முன், பாண்டியன் உயிர்விட்ட செய்தி சென்றடையட்டும் என்றனன். அத்தோடு நில்லாமல்,

*'வல்வினை வளைத்த கோலை மன்னன்*
*செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது'*

எனப் போற்றினான்.

பாண்டியன் இங்ஙனம் உயிர்துறந்ததும், பாண்டிமாதேவி 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்று இணையடி தொழுதுவீழ்ந்ததும், ஈடுஇணையற்ற செயல்களேயாயினும், பாண்டியன் செய்தபழி பழியே. அரசியல் பிழைத்தோர்க்கு

அறம் கூற்றாகிவிட்டது. பாண்டியனும் பாண்டிமாதேவியும் இறந்த பின்னும் கூட -

*'அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றமாம் என்னும்*
*பல்லவையோர் சொல்லும் பழுதன்றே - பொல்லா*
*வடுவினையே செய்த வயவேந்தன் தேவியே*
*கடுவினையே னாகிய நான் செய்வதையும் காண்பாயாக'*

என்பது கவலையால் சினமுற்ற கண்ணகியார் உரைத்த முதல் வஞ்சினமாகும்.

## கண்ணகி என்ற தர்மதேவதை

கண்ணகி, பாண்டியன் அவையில் ஒரு தர்மதேவதை யாகவே காட்சியளிக்கின்றாள். அவளைக் கண்ட வாயிற் காவலனுக்கு அவள் ஒரு சாதாரணப் பெண்ணாகத் தோற்றமளிக்கவில்லை. அவன், அறக்கடவுளின் கோரத் தோற்றத்தையே அவளில் காண்கிறான்:-

*'அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந்துணிப்*
*பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி*
*வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்*
*அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை*
*ஆடல் கண்டு அருளிய அணங்கு சூருடைக்*
*கானகம் உகந்த காளி, தாருகன்*
*பேருரம் கிழித்த பெண்ணு மல்லள்*
*செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்'*

என்று கூறி வாயிற்காவலன் நடுங்குகின்றான்.

கோவலன் கொல்லப்படுவதற்கு முன் நாம் காணும் கண்ணகி வேறு; 'கள்வனாம் என்றே குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே' எனக் கேட்டபின், நாம் காணும்

கண்ணகி வேறு. பாண்டியன் அவையில் வழக்குரைத்தது வெறும் கண்ணகியல்ல; கண்ணகி வடிவில் வந்த அறக் கடவுளேயாகும்.

கண்ணகி தன் வழக்கை எடுத்துக் கூறிய உரையினால் மாத்திரமல்ல, அவளது காவி உகு நீரும் கையில் இருந்த ஒற்றைச் சிலம்பும், ஆவிகுடி போன அவள் தோற்றமும் காடுபோற் பரந்த கருங் கூந்தலும் கண்ட அளவிலேயே பாண்டியன் உயிர் போய் வெற்றுடம்பாயினான்.

### பாண்டியன் அநீதியாளனா?

கண்ணகியின் மெய்யிற் கிடந்த புழுதியும், விரிந்த கருங்கூந்தலும், கையிற்சிலம்பும் கண்ணீரும் கண்டளவிலேயே பாண்டியன் வழக்கில் தோற்றுப் போனான்.

கண்ணகி, பாண்டியன் அவையில் தன் வழக்கை எடுத்தாற்றிய உரையைக் கேட்டளவிலேயே அவன் உயிர் தோற்றான்.

பாண்டியன் நீதி தவறியவனேயன்றி அநீதியாளன அல்லன். அவனது வளையாத செங்கோல் வளைந்ததற்குக் காரணம் உண்டென்கிறார் இளங்கோ.

*'கண்ணகிதன் கேள்வன் காரணத்தால்*
*வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை*
*விளைவாகி வந்த வினை.'*

என்ற அடிகளின் மூலம், பண்டை விளைவாகி வந்த வினையே காரணமாகும் என்றும், அதற்குக் கண்ணகி கேள்வன் வாயில் என்றும் இளங்கோ கூறுகின்றார்.

## அறம் தவறிய முடிமன்னரும் இருந்தனர்

முடிமன்னர் மூவருள்ளும், நீதி தவறாத மன்னரும் இருந்தனர். ஆனால் எல்லோரும் நீதி தவறாதவர் என்னும் ஒரு மயக்கம் நமக்குண்டு; அது தவறு.

*'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள*
*வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு*
*தென்திசை யாண்ட தென்னவன் வாழி.'*

என மாங்காட்டு மறையோன் பாண்டியனை வாழ்த்து கின்றான். பாண்டியன் நெடுஞ்செழியனின் முன்னோன் செயலைக் கூறி, முன்பு இழந்த தன் பஃறுளியாற்றுக்காகக் கங்கையையும், குமரிக் கோட்டுக்காக இமயத்தையும் கொண்டது வீரமாகலாம்; ஆனால் நீதியாகுமா?

**பாண்டியர் நீதி**

'தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும் கண்மணி குளிப்பக் கண்டேன் ஆதலின் வாழ்த்தி வந்திருந்தேன்' எனக் கூறும் மாங்காட்டு மறையோனின் வாழ்த்திலும், கோவலன் கண்ணகியர் புறஞ்சேரி இறுத்த பின், பகலிலன்றி நிலவொளி விளக்கிலும் நடந்து செல்லத் துணிந்தனர் என்றபோதும், பாண்டிய நாட்டில் நிலவிய நீதி பேசப்படுகிறது.

பின்வரும் அடிகள் அந்த நிலையை உறுதிப்படுத்து கின்றன:

*'கேள்வல் உளியமும் கொடும்புற்று அகழா*
*வாள்வரி வேங்கையும் மான் கணம் மறவா*

*அரவும் சூடும் இரைதேர் முதலையும்*
*உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா*
*செங்கோற் தென்னவன் காக்கும் நாடு'*
(உளியம் - கரடி, சூடு - பேய், உரும் - இடி)

ஆதலால் இரவிடைக் கழிவதற்கு ஏதமில்லை என முடிவு செய்தனர். இங்கு பகைப்பொருள்களும் பகை மறந்து நட்புப் பொருட்களாக மாறியுள்ளன என்னும் கூற்றை அப்படியே நம்பி விடுகின்றோம்.

*'மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழ உலகு புரப்பது'* என்பது, புகழேந்தி போன்ற சான்றோர் காண விழைந்த உலகேயன்றி, நடைமுறையில் கண்ட உலகன்று. ஏனெனில் *'அடுவதும் தொலைவதும் புதுவதன்றே பண்டும் இவ்வுலகத்தியற்கை'* என்பது புறப் பாடல். பகைப் பொருள் உலக இயக்கத்துக்குத் தேவையான ஒரு முரண்சக்தியே யன்றி வேறல்ல; பகைப்பொருள் நட்பாதல் அரிதினும் அரிது. அது இல்லது; ஆனால் இனியது; அவ்வளவே.

**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்**

சிலப்பதிகாரச் செய்யுள் மூன்றினுள்ளும் மேலாண்மைச் செய் - உள் ஒன்றுண்டு. அதுவே ஏனைய இரண்டினுள்ளும் ஊடுருவி நிற்கும் செய் - உள் ஆகும். அது, ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்னும் உண்மையாகும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் என்னும் விதிக்கேற்ப, அரசு துறந்து துறவியாகி விதிக்கு விதி செய்த பேராண்மை படைத்த இளங்கோ, பாண்டியன் அரசியல் பிழைத்தமைக்கு

ஊழே காரணம்; என்றும் உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவதற்கும் ஊழே காரண்ம் என்றும் கன்மக் கோட்பாட்டினையே சிலம்பின் ஒப்பற்ற ஒரு பரலாக உள்ளமைத்தனர் எனக் கொள்வதும் ஏற்றதே.

கணவனை இழந்தபின், என் தலைவிதி இதுவென அவலங் கொண்டு செயலற்று வாளா இருக்கவும், மனம் போன போக்கில் வாழவும் பல காரணங்கள் இருப்பவும்,

*'அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்*
*கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே*
*குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே'*
(ஞெகிழம் - சிலம்பு)

எனக் கூறிப் பொங்கியெழுந்தாள்.

*'அன்பனை இழந்தேன்யான் அவலங் கொண்டழிவலோ'*
*'அறனெனும் மடவோய் யான் அவலங் கொண்டழிவலோ'*
*'இம்மையும் இசைஒரீஇ, இனைந்து ஏங்கி அழிவலோ'*
(இசைஒரீஇ - புகழழிந்து)

என்று அரற்றி நின்ற கண்ணகியார்,

*'பாய்திரை வேலிப் படுபொருள் நீஅறிதி;*
*காய்கதிர்ச் செல்வனே*
*கள்வனோ என் கணவன்?'*

எனக் கேட்டு விதிக்கு விதி செய்தாள்.

ஔவையார், *'மதியே விதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாகிவிடும்'* என விடுபடா வினாவுக்கு விடை தந்துள்ளார்.

எனவே, பண்டை விளைவாகி வந்தவினை, கண்ணகி தன் கேள்வனை வாயிலாக வைத்துக் கோப்பெருந்தேவியின் ஊடலை நீக்கிக் கூடும் காமத்தனாகப் பாண்டியனை மெலிவித்து, அரசு பிழைக்கச் செய்தது; கோவலன் செய்த வினையே கோவலனைக் கொன்றது; அவ்வினையை அறக்கடவுள் கூற்றுவனாக வந்து ஊட்டுவித்தது.

எனவே பாண்டியன் கொலைக்குக் கண்ணகி எவ் விதத்திலும் காரணமல்லள்; பாண்டியனைப் பாண்டியனே கொன்று விட்டான்.

## எய்தவன் இருக்க அம்பை நோவதோ?

இங்ஙனமே, மதுரை மாநகரின் அழிவுக்கும், ஏனைய மரணங்களுக்கும், எய்தவன் இருக்க அம்பை நோவது சாதாரண மக்கள் வழக்கமாகும். தத்துவ விளக்கம் காணும் போது, தமது துன்பத்துக்குத் தாமே காரணமென்பதனைப் புரிந்துகொள்ள முடியும். அறம் கூற்றாகும்போது, பல துணைக் காரணங்களையும் துணை வினைகளையும் இயைத்தே செயற்படுவதைக் காணலாம். பண்டை வினை பாண்டியனுக்கு விளைவாகி வந்த வேளை, கோவலனுக்கும் பண்டை வினை விளைகாலமாதலால், சினையர் வேம்பன் யாதும் தேரானாகினான்.

பாண்டியன், கோவலன் ஆகிய இருவருக்குமே, வினை விளையும் காலம் கூடிவிட்டது. எனவே பாண்டியன் கோவலனைக் கொன்று தானுமிறந்தான். இந்த அறத்தின் செயற்பாடு, ஞானிகளுக்கேயன்றி ஏனையோர்க்குப் புலப் படாது.

## தருமம் என்று ஒரு பொருள் உண்டு

*'தருமம் என்று ஒரு பொருளுளது, அது அமரரும் அறியொணாதது'* எனக் கந்தபுராணம் கூறும். தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வியதையும், தருமம் மறுபடியும் வென்ற மர்மத்தையும் பாரதம் கூறுகிறது. இதனையே ஈழத்து யோக சுவாமிகள், *முழுதும் உண்மையென்றும், எப்பவோ முடிந்த காரியம் என்றும், யாம் ஒன்றும் அறியோம் என்றும், ஒரு பொல்லாப்புமில்லை என்றும்* மொழிந்தருளினார்கள்.

பாண்டியன் மயங்கி வீழ்ந்து இறந்தது கண்டு, கோப் பெருந்தேவியின் உள்ளம் குலைந்தது. உடல் நடுங்கியது. அவள், 'கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்' எனக் கூறிக் கணவன் இணையடிகளைத் தொட்டு வணங்கி உயிர் துறந்தாள்.

அடைக்கலமாக வந்த, கோவலன் கண்ணகியரைக் காத்து ஓம்பாது பிழை செய்தேன் என்று கூறி, மாதரி என்னும் மங்கை நல்லாளும் உயிர் துறந்தாள். மொய்குழல் மங்கை கண்ணகி, மதுரையில் இழைத்த முலைப்பூசல் கேட்டுக் கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் துயர் தாளாது உயிர் துறந்தனர்.

கோவலனைக் கள்வனெனக் காட்டிக் கொடுத்த பொற் கொல்லனின் கதி என்ன?

இத்தனை மரணங்களுள்ளும் அறக்கடவுள் கூற்றுவனாக நின்று அவ்வவரை உயிர் வேறு உடல் வேறாகக் கூறு செய்த போதும், செழியன், கோவலன் ஆகிய இருவரது மரணத்தை வைத்தே, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகுமெனத் தெளிகின்றோம். அவருள்ளும் செழியனின் மரணத்தை

வைத்தே, அறம் கூற்றாகும் விதியை உலகு நன்கு உணரக்கூடும். இதனாலேயே பொறுப்பும் கடமையும் பெருமையுமுடைய பாத்திரமாயினும், நீதி தவறியபோது, அறமானது இன்னார், இனியார் எனப்பாராது செயற்படும் என்பதை இளங்கோ காட்டும் பாங்கு சிந்திக்கத்தக்கது.

## மதுரையை எரித்தது முறையா?

கதையோடு தொடர்புடைய இத்தனை மரணங்களையும் நாம் புரிந்து கொண்டாலும், மதுரை எரிக்கப்பட்டதை நம்மில் பலரால் சீரணிக்க முடிவதில்லை.

ஏன்?

தனிமனிதனுக்கு விதி இருப்பது போலச் சமுதாயத்துக்கும் விதி உண்டு; விதியின் விளைவுண்டு; எள் ஏன் காய்கிறது? எண்ணெய்க்காக; எலிப்புழுக்கை ஏன் காய்கிறது? கூடக் கிடந்த குற்றத்திற்காக என்பது ஈழநாட்டில் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் உண்மையாகும்.

## அறம் தவறிய அறிஞர்கள்

ஒருவன் தீமை புரியாது வாழக்கூடும்; நன்மை பல செய்யக் கூடும். அதனால் மட்டும் அவன் அறத்தில் நிறைவுடையவன் அல்லன். தீமை நடப்பதை, எனக்கென்ன என்று பயத்தினாலோ, தன்னலத்தினாலோ எதிர்க்கத் தயங்கி யிருக்கலாம். அவ்வாறு தயங்கினாலும் அவன் அறம் தவறிய வனேயாவான்.

துரோணர் முதலியோர் மரண வேதனைப்பட்டுப் பல நாட்கள் அம்புப் படுக்கையில் கிடந்து உயிர் போகாது, காலம் போக்கியதற்குக் காரணமென்ன?

அந்த அரச சபையில் முறையோ முறையோ என ஓர் அபலைப் பெண் எழுப்பிய அவலக் குரலைக் கேட்டும், கேளார் போலக்கிடந்த கிழவர்களிவர்கள். பாண்டவரும் பார்த்திருந்த அந்தச் சபையில், நெட்டை மரங்களென நின்று புலம்பினர் சிலர். இழுத்து வரும்போதும், என்ன கொடுமையிது என்றே பார்த்திருந்தவர் பலர்.

வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியரும் வெஞ்சினங் கொள்ளாது வீற்றிருந்தனர். 'நிறுத்தடா' என்று ஒரு வாய்கூடக் கூறவில்லை!

அந்தப் பெரியவர்கள் வேள்வி தவங்களை மிகப்புரிந்த மேலோர்கள்; தீமை புரியாதவர்கள்; நன்மை பல செய்தவர்கள்; ஆனாலும் பட்டப்பகலிலே பார்வேந்தன் சபையிலே பத்தினி ஒருத்தியைப் பாதகன் ஒருவன் துகில் உரிந்து, மானபங்கப் படுத்தியபோது, தலைகுனிந்து பார்த்திருந்த பாவம் செய்த வர்கள். அந்த அறப் பிழையே அவர்களது அந்திய கால வேதனைக்குக் காரணமாயிற்று.

## சடாயு போதித்த அறம்

அது ஒரு பறவைதான்; வானவீதியில் காற்றைக் கிழித்து வரும் ஒரு பெண்ணின் அவலக்குரலை அது கேட்டது. அவனை எதிர்க்க முடியாதென்பது அதற்கு நன்கு தெரியும். எதிர்ப்பதின் விளைவும் தெரியும். வெற்றியீட்ட முடியாத, தன்னையே அழிக்கும், அந்தச் செயலைச் செய்வதற்கு அது துணிந்து விட்டது. காமவசத்தனாகிய இராவணனுக்கு அந்தப் பறவை ஒரு பொருட்டா? அறத்துக்காகப் போராடிய அந்தப் பறவை மரண சுகம் அடைந்தது. அதன் பெயர் சடாயு. இராமாயணத்தில் நட்புக்கு இலக்கணம் சடாயுப் பட்சி.

இரக்கம் அற்ற மதுரை மாந்தர்

*'சான்றோரும் உண்டு கொல்!*
*சான்றோரும் உண்டு கொல்!*
*பெண்டிரும் உண்டு கொல்!*
*பெண்டிரும் உண்டு கொல்!*
*தெய்வமும் உண்டு கொல்!*
*தெய்வமும் உண்டு கொல்!'*

என அல்லற் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு மதுரை மாநகர வீதி வழியே தன்னந்தனியாகக் கணவனைத் தேடி நடக்கிறாள் கண்ணகி.

அவளது கணவனின் முடிவை அறிந்தும், அவள் அவலங் கண்டும், காணாததுபோல அந்நகர மக்கள் நடந்து கொண்டார்கள்.

இறுதியில் 'வம்ப மாக்கள் கணவனைக் காட்டக்' கணவனைக் காண்கிறாள். சான்றோரும் சாலார் போல, மௌனம் சாதித்த வேளையில், பொறுப்பற்றுத் திரியும் வம்ப மாக்கள் சிலர், 'அம்மா யாரோ ஒருவன் அதோ செத்துக் கிடக்கிறான். போய்ப் பார்' என்று காட்டுகிறார்கள். அந்த அபலை, வாழ்வு வேண்டி ஊழ்வினை துரப்பக் கீழை வாயிலால் மதுரை மாநகர் புக்கவள்; கணவனை இழந்த பின்,

*'கருத்துறு கணவனைக் கண்டபின் அல்லது*
*இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலனெனக்*
*கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்*
*மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென'*

வஞ்சி நோக்கிப் பெயர்கின்றாள்.

## மதுராபதி உரைத்த உண்மை

பாண்டிய மன்னர்க்கும் பாண்டியன் நெடுஞ்செழி யனுக்கும் வழங்கப்பட்டுள்ள நற்சான்றுகள் பல. நெடுஞ் செழியன் நீதி தவறியதால் பாதிக்கப்பட்ட கண்ணகியே *'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில் நல் விருந்து ஆயினான்'* எனப் போற்று கின்றாள்.

மதுரை மாநகர் தீ மண்டியபோது, கூர்எரிபொறாது வந்து தோன்றிய மதுராபதித் தெய்வம், கண்ணகியின் முன்னிலையிற் செல்ல அஞ்சிப் பின்னிலையில் தோன்றி -

*'தோழி நீ ஈதொன்று கேட்டீ என் கோமகற்கு*
*ஊழ்வினை வந்தக் கடை*
*மாதராய் ஈதொன்று கேள்உன் கணவற்குத்*
*தீதுற வந்த வினை'*

எனச் செழியர்க்கும் கோவலர்க்கும் அவரவர் பழவினையே கூற்றாயினதெனக் கூறிய மதுராபதி,

*'மறைநா ஓசையல்லது யாவதும்*
*மணிநா ஓசை கேட்டது மிலனே'*

என்று கூறிற்று.

(மறைநா ஓசை - வேத ஒலி, மணிநா ஓசை - ஆராய்ச்சி மணி ஒலி)

*'அடிதொழுது இறைஞ்சா மன்னரல்லது*
*குடி பழி தூற்றும் கோலனு மல்லன்'*

எனச் செழியன் புகழ் கூறிய தெய்வம், பாண்டிய மன்னர் குடியில், இளவரசர்தாமும் இளமையால் காமம் மீதூரப் பெறினும், நெறி தவறிச் செல்லார் என்பதனை -

*'நன்னுதல் மடந்தையர்*
*மடங் கெழு நோக்கின் மதமுகம் திறப்புண்டு*
*இடங்கழி நெஞ்சத்து இளமை யானை*
*கல்விப் பாகன் கையகப் படாஅது*
*ஒல்கா உள்ளத்து ஓடு மாயினும்*
*ஒழுக் கொடு புணர்ந்த இவ்விழுக்குடி'*

என, நெறி தவறாமை, பாண்டியர் குடிக்குணம் என்று கூறுவதைக் காணலாம்.

### கோல் கோடியது ஏன்?

இங்ஙனம் இருப்பவும், கூடல் மகளிர் ஆடல் தோற்றமும் பாடல் பகுதியும் பண்ணின் பயங்களும் காவலன் உள்ளம் கவர்ந்ததும், அதனால் ஊடல் கொண்டு, கூட மறுத்து, ஏகிய குலமுதல் தேவியை ஊடல் போக்கிக் கூட விழைந்ததும், எங்ஙனம் பொருந்தும் என்ற வினா எழக் கூடும். கோவலற்கும் பாண்டியற்கும் அவரவர் செய்த வினை, விளைகாலமாதலின் குலமுதல் தேவியிடம் இடம் கழிந்து சென்ற காமயானை கல்விப்பாகன் கையகப்படாது ஓடியதால், சினையலர் வேம்பன் யாவதும் தேரானாகிக் கொன்று அச்சிலம்பு கொணர்க எனக் கோல்கோடினான் என்பதே விடையாகும்.

### சிலப்பதிகாரச் செய்யுள் மூன்றும் மூவாஉண்மைகள்

சிலம்பின் பாவிகமாகிய முப்பொருள்களும் மூவா உண்மைகளாகும். இவை இளங்கோவின் கண்டுபிடிப்பு களல்ல. ஆனால் மாநிலம் காக்கும் மன்னரே, அரசியல் பிழைக்கின் அறம் காப்போர் யாவர்? எனவே, அரசனாயினும், அறம் பிழைக்கின் அறமே கூற்றாகுமானால், மற்றவர் கதி

என்ன? என்பதை உணர வைப்பதே ஆசிரியரின் உட் கருத்தாகும். அதனாலேயே பாண்டியன் நெடுஞ்செழியன் மாத்திரமல்ல, அவன் குலமும், நீதி தவறா நெறிமுறையில் இட்ட வாழ்க்கையுடையவராயினும், ஏற்பட்ட சிறுதவறும் வினையாகி, விளையும் காலத்தில் விதியாயிற்று.

**கண்ணகி பொறுப்பல்ல**

மேலும்,

*'ஆடித்திங்கள் பேரிருட் பக்கத்து*
*அழல் சேர் குட்டத்து அட்டமி ஞான்று*
*வெள்ளிள வாரத்து ஒள்ளெரி உண்ண*
*உரை சால் மதுரையோடு அரைசு கேடுறு மெனும்*
*உரையு முண்டே'*

என்று மதுராபதித் தெய்வம் கூறியது.

(அழல் சேர் குட்டம் - கார்த்திகை முதலாம் நாள்)

கண்ணகி பின் வந்த மதுராபதித் தெய்வம், பாண்டியன் முறைபிழைத்த தகுதியும் கேள்நீ என விளித்து, மதுரையும் அரசும் கேடுறும் எனக் கூறியது. எனவே, மதுரையும் அரசும் கேடுறுதற்கான அறப்பிழை "எப்பவோ முடிந்த" காரியமாகி விட்டது. எனவே இக்கேட்டிற்குக் கண்ணகி எவ்விதத்திலும் பொறுப்பாகாள். கண்ணகி கூறுவதே இதற்குச் சான்று:

*'மட்டார் குழலார் பதிப்பிறந்தேன்*
*பட்டாங்கு யானு மோர் பத்தினியே யாமாகில்*
*ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்'*

எனக் கண்ணகி வஞ்சினமுரைத்ததும், கள்வனே அல்லன் கருங்கயற்கண் மாதராய் ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்' எனக்

காய்கதிர்ச் செல்வன் குரல் கொடுத்ததும், கண்ணகி வாயிலாக அறக்கடவுள் கூறிய கூற்றுக்களேயன்றி வேறல்ல.

## கண்ணகியின் தெய்வாம்சம்

காதலனுக்குக் கடுந்துயர் ஏற்பட்டபோதே, கண்ணகி சில உற்பாதங்களை உணரத் தொடங்கி விட்டாள். அப்போதே அவளது தெய்வீக இயல்புகள் தோன்றத் தொடங்கிவிட்டன என்பதைச் சிலம்பின் துன்பமாலை புலப்படுத்துகின்றது. தெய்வீக இயல்பின் உச்சக் கட்டத்திலேதான், காய்கதிர்ச் செல்வனைச் சாட்சிக்கு அழைத்துக் காதலன் கள்வன் அல்லன் என உலகறிய உறுதி செய்தாள். எனவே கண்ணகி செயலெல்லாம் கண்ணகி செயலன்று, அறத்தின் செயலே யாகும்.

*'யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த*
*கோநகர் சீறினேன் (ஆதலால்) குற்றமிலேன்'*

எனக் கோநகராம் மதுரையை அழித்ததற்குக் காரணம் கூறினாள். கண்ணகி மணிமுலையை வட்டித்து விட்டெறிந்த வேளை, வந்து தோன்றிய எரிஅங்கிவானவனும், 'மாபத்தினி நின்னை மாணப் பிழைத்த நாள் பாயெரி ஊட்டப் பண்டையோர் ஏவலுடையேன்' எனக் கூறிய கூற்றாலும், மதுரையின் அழிவிற்கு மாபத்தினி காரணமல்ல என்பது புலனாகும்.

## மாதரியின் மாண்பு

மதுரை மாநகரச் செல்வக் குடியினர் பலர், அறம் தவறிய வாழ்க்கையினராக இருந்தபோதும், மாதரி என்ற இடைக்குல மடந்தை, தான் அடைக்கலமாகப் பெற்ற

கோவலன் கண்ணகியரைக் காவாமல் குற்றம்பட்டேனே எனத் தன் ஆருயிர் போக்கிய செய்தினை நாம் அறிவோம்.

### வன்பழி தூற்றிய மாமதுரை மக்கள்

ஆனால் கணவனை இழந்த கண்ணகி, பொங்கி எழுந்து அழுது கேள்வனைக் காணது எங்கணா என்று இனைந் தேங்கி வஞ்சினங் கூறிக் காய்கதிர்ச் செல்வனின் உரை கேட்டு, இம் மதுரை மாநகரில் 'பெண்டிரும் உண்டுகொல்!' 'சான்றோரும் உண்டு கொல்!' 'தெய்வமும் உண்டு கொல்!' எனத் தனக்குற்ற துயர் துடையாத ஊமை உலகை விளித்து அலமந்து, கேள்வனைத் தேடிச் சென்றபோது, கண்ணகிக்கு உதவுவார் அந்நகரில் யாருமிலர். ஆனால், அவ்வூரவர் இயல்பு கூறவந்த இளங்கோ, 'வன்பழி தூற்றும் குடியதே மாமதுரை' என்கிறார். பிறர்பழி நாணாது, கொண்டு தூற்றும் குடிகளை யுடையதேயன்றி, பழியொடு படராத குடியதன்று மாமதுரை. இந் நகரில் உள்ள வீணர்களே, கண்ணகிக்குக் கணவனைக் காட்டினார்கள்.

*'கம்பலை மாக்கள் கணவனைத் தான் காட்டச்*
*செம்பொற் கொடியனையாள் கண்டாள்'*
(கம்பலை - ஆரவாரம்)

வெட்டிப் பேச்சுப் பேசும் வீணர்களே கம்பலை மாக்களாவார். இவர்களே கண்ணகிக்கு வெட்டுண்டு இறந்து கிடந்த கோவலனைக் காட்டினர். இத்தகைய நிலையிலேயே மதுரை மாநகர் அன்று விளங்கியது. பிறர்பழி தூற்றும் குடிகள் நிறைந்த அந்நகரில், பேட்டைக் காவாலிகளே வீதியில் நின்றனர். மற்றெல்லோரும் நமக்கேன் வீண்வம்பு என்ற போக்குடையவராயிருந்து, அநீதிக்குத் துணை

போயினரன்றி, அநீதியைத் தட்டிக் கேட்கும் வீரமுடையாராக இருக்கவில்லை.

## ஆண்மையற்ற நீதிமான்கள்

பாண்டியன் ஆட்சியில் நன்மை புரிவோர், தீமை புரியாதோர் என்று பலர் வாழ்ந்தனர். ஆனால் தீமையை நிறுத்தடா என்று சொல்லும் ஆண்மையாளர் அங்கு யாருமில்லை என்பது உறுதி.

முன்னே ஓரிடத்தில் கூறியதுபோல, துரோணர் போன்ற பெரியோர் கூட மரண வேதனைப்பட்டே மரணத்தைத் தழுவினர். இதற்குக் காரணம் என்ன? துரியோதனன் சபையிலே பாஞ்சாலியின் துகிலையுரிந்த போது, அச் சபையில் துரோணர் போன்ற பெரியோரும் பார்த்திருந்தனரே யன்றித் தடுத்திலர். காரணம், நமக்கேன் வீண்வம்பு என்ற போக்குத்தான். துரோணர் போன்றோர் நீதிமான்களே. ஆனால் அநீதியைத் தட்டிக் கேட்கும் ஆண்மையாளர்களல்லர்.

## வீடுமனும் தரம் தாழ்ந்தான்

சபையில் நீதி கேட்ட திரௌபதை, வான் சபையில் 'கேள்வி பல உடையோர் கேடிலா நல்லிசையோர் மேலோர் இருக்கின்றார். வெஞ்சினமே கொள்கிலரோ' என வினவி, 'நின்னை எவரும் நிறுத்தடா என்பதிலர், என் செய்வேன்' என்றே இரைந்தழுதாள். இந்த ஊமைச் சபையை உணர்ந்த துச்சாதனன் 'தாதியடி தாதி' எனத் தீதுரைகள் கூறினான். கர்ணன் சிரித்திட்டான்; சகுனி புகழ்ந்தான்; சபையோர் வீற்றிருந்தார்கள். தகுதி யுயர் வீடுமனும் நீதிபல சொன்னானே யன்றித் தீங்கு தடுக்கும் திறமிலேன் எனத் தலை கவிழ்ந்தான்.

அரசியல் பிழைத்த இந்தச் சபையாரைப் பதினெட்டு நாள் நடந்த போரில், அறம், கூற்றாக வந்து கவனித்துக் கொண்டது.

**மதுரையை எரித்தது கொடும் செயல் அன்று!**

பாரத காலத்துப் பரத கண்டத்தைப் போலவே பாண்டியன் காலத்து மதுரையும் தண்டனைக்குள்ளாயிற்று. எரியங்கி வானவன், யார் பிழைப்பார் எனக் கேட்டபோது -

*'பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவி எனும் இவரை விட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்க'*

எனப் பணித்தாள் கண்ணகி.

உடனே, 'ஏவல் தெய்வத்து எரிமுகம் திறந்தது. காவல் தெய்வங்கள் காவாது ஒழிந்தன.

அறவோர் மருங்கில் அழல்கொடிவிடாது, மறவோர் சேரி எங்கும் எரி நிறைந்தது. கறவையும் கன்றும் இடைச்சேரி யடைந்தன. மறவெம்களிறும் பிடியும் புறமதில் அடைந்தன. பத்தினிப் பெண்டிர் புதல்வரைத் துயிலெழுப்பி, மூத்தோரையும் அழைத்துக் கொண்டு ஒதுங்கினர்.

தீயவர் அழியவும், நல்லவர் தூங்கவும், தீ பரவிய வேளையில், மனையறம் தவறாத மகளிர், கணவனை இழந்த நங்கை, சிலம்பால் வழக்கை வென்று, கொங்கையால் மதுரையை எரித்த செயல் கொடிதன்று எனக் கூறித் தீக்கடவுளைத் தொழுதனர்.

இதனை இளங்கோ அடிகள் -

*"வருவிருந்து ஓம்பி மனையறம் முட்டாப்*
*பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ்வு எய்தி*

*இலங்குபூண் மார்பிற் கணவனை இழந்து,*
*சிலம்பின் வென்ற சேயிழை நங்கை,*
*கொங்கைப் பூசல் கொடிதோ அன்று எனப்*
*பொங்கெரி வானவன் தொழுதனர் ஏத்தினர்''*

எனக் கூறுவர்.

## அரசியல் பிழைத்ததன் விளைவு

எனவே, அரசியல் பிழைத்த காரணத்தால், கோவலன் இறந்தான்; செழியன் செல் உயிர்நீத்துச் செங்கோலாக்கினான்; பாண்டிமாதேவி, கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்' எனக் கணவன் இணையடி தொழுது விழுந்தனள். அடைக்கலம் காத்தோம்பாது வடுப்பட்டேன் என மாதரி உயிர் நீத்தாள். கோவலன் கண்ணகியரின் துயர்கேட்ட இருவர் தாயரும் உயிர் துறந்தனர். மதுரைத் தீ, தீயோர் அனைவரையும் அழித்தது. என்னோடு இருவர் வினை உருத்ததோ என உண்ணா நோன்பிருந்து கவுந்தி அடிகள் உயிர் நீத்தனர்.

சிலம்பின் ஒரு பரலாகிய அரசியல் பிழைத்தோர்க்கு, அறம் கூற்றாகுமென்பது தமிழ்ச் சான்றோர் காட்டும் மாறா உண்மையாகும். அறத்திற்கும் மறத்திற்கும் பாவத்துக்கும் புண்ணியத்திற்கும் நடக்கும் போராட்டமே தமிழரின் சிந்தனை வெளியீடாக இன்றுவரை வெளிவந்து கொண்டிருக் கின்றது.

## தமிழ்த் தத்துவ ஞானிகளும் கிரேக்கரும்

வாழ்தல் வேண்டிப் பொய் கூறாத, செய்யாகூறிக் கிளத்தல் செய்யாதாகின்ற சிறு செந்நாவும், நீர்வழிப்படூ உம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம் என்னும்

உறுதியும், பொன்னும் பொருளும் வேண்டாது அன்பும் அறமும் அருளும் வேண்டும் அவாவும், அறிவது அறிந்து அடங்கி, அஞ்சுவது அஞ்சி, உறுவது உலகுவப்பச் செய்து, பெறுவதினால் இன்புற்று வாழும் இயல்பும் உடைய சான்றோர் பலராக வேண்டுமென்பதும், அவர் வழியில் அரசு செயற்பட வேண்டுமென்பதுவும் கிரேக்க, தமிழ்த் தத்துவஞானிகள் கொண்ட கருத்துக்களாகும்.

சிலம்பின் முடிவுரையாக இளங்கோவடிகள் வழங்கும் அறவுரை அரசுரையாகும். அது அரசர்க்கேயன்றி யாவர்க்கும் உரிய அறவுரையாகும்.

சிலப்பதிகாரம் முழுவதிலும் விரித்துக் கூறப்பட்டவை பலவாயினும், அவற்றுள் சிறப்பாயமைவது கண்ணகியின் திறம் ஆதலால், இளங்கோ, ''இமையோர் இளங்கொடி தன் திறம் அதனை உரைத்த தகைசால் நன்மொழியே சிலம்பு'' எனக் கண்ணகி பற்றிய தன் உரையை முதன்மைப்படுத்த, அதனைத் தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் என விளித்து,

*'பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்*
*தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்*
*பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்*
*ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்*
*தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்*
*செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்*
*பொய்க் கரிபோகன்மின் பொருள்மொழி நீங்கன்மின்*
*அறவோர் அவைக்களம் அகலாதணுகுமின்*
*பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்*
*பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்*

*அறமனை காமின் அல்லவை கடிமின்*
*கள்ளும் களவும் காமமும் பொய்யும்*
*வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்*
*இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையாது*
*உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது*
*செல்லுந் தேயத்துக்கு உறுதுணை தேடுமின்*
*மல்லன்மா ஞாலத்து வாழ்வீரீங்கென்' -*

எனக் காவியத்தை நிறைவு செய்கின்றார்.

★ ★ ★

## பாகம் - 2

# கண்ணகி சிந்தாத கண்ணீர்

### பெண்களின் ஏக்கம்

'பெண் என்று பூமிதனில் பிறந்துவிட்டால்...'

இது தமிழ்ப் பெண் குலத்தின் ஏக்கக் குரல் மாத்திர மல்ல; உலகப் பெண் குலத்தின் ஒட்டு மொத்தமான ஏக்கக் குரலுமாகும். மேலைநாட்டுப் பெண்கள் உரிமைகள் பல பெற்று, முன்னேறியிருக்கிறார்கள். கீழைநாட்டில் ஜப்பானியப் பெண்களும் முன்னேறியிருக்கிறார்கள். இருந்தும் அவர்களின் ஏக்கக் குரல் கடலலை போல் ஒலிக் கின்றது ஓயாமல்.

இந்த ஏக்கம், பெண்ணினத்தின் பொதுவான ஏககம். எல்லாப் பெண்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுவான ஏக்கம். இது தமிழ்ப் பெண்களை மாத்திரம் வருத்தும் ஓர் ஏக்க மல்ல. இதனை உணர்ந்தே பாரதியார், தமிழ்ப்பெண் என்று கூறாமல், பொதுவாகப் பெண்ணென்று கூறிவிட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

பெண்களின் ஏக்கக் குரலை, வீட்டிலும நாட்டிலும் அன்றாட வாழ்க்கையில் மாத்திரமல்ல, சமயநூல்களிலும் இலக்கியங்களிலும் வரலாற்று நூல்களிலும் நிறையப் படிக்கிறோம். படித்துப் படித்து, ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களே அதனை நியாயப்படுத்துமளவுக்கு ஊறிவிட்டனர்.

'நானொருத்தி பெண் பிறந்து இரண்டுபட்ட துலகமே' என ஒரு பெண் அலுத்துக் கொண்டாள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பெண்பிறப்பு ஒரு பாவப் பிறப்பாகக் கருதப்படுகிறது. 'பெண்ணென்று பிறந்து விட்டால் பெரும்பீழை இருக்குதடி தங்கமே தங்கம்' என்ற யதார்த்த நிலைமையைப் பாரதி பாடுகிறார்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' எனத் தொடங்கிய ஔவையார், 'பேடுநீங்கிப் பிறத்தலும் அரிதே' என்றார். ஏனெனில், பெண்ணாய்ப் பிறந்தோர் படும்பாட்டை அவர் நேரில் கண்டவர்.

## இக்காலப் பெண்ணியல்வாதிகள்

சான்றோரால் மிக மேன்மையாகப் போற்றப்பட்ட கதா பாத்திரங்களான சீதை, கண்ணகி, நளாயினி முதலியோர் இன்றைய பெண்ணியல்வாதிகளால் மிகவும் விமர்சிக்கப் பட்டு வருவதைக் காண்கின்றோம். வள்ளுவரும் இந்த விமரிசனத்திலிருந்து தப்பவில்லை. நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாமென்னும் பாரதியின் சீற்றத்தையும் தமக்கு அரணாக்கிக் கொள்கின்றனர்.

பெண்களை அடிமைப்படுத்துவதற்குச் சீதை, கண்ணகி போன்றோரை முன்னுதாரணமாக்கி, ஆணாதிக்கம் செலுத்துவதே நோக்கம் என்பது அவர்கள் கருத்து.

## பொறுக்கவேண்டிய இடத்தில் பொறுத்த கண்ணகி

கண்ணகி பொறுக்க வேண்டிய இடத்தில் பொறுத்துப் பொங்க வேண்டிய இடத்தில் பொங்கினாள். அவள்

கண்ணீரை அடக்க வேண்டிய இடத்தில் அடக்கி, சிந்த வேண்டிய இடத்தில் சிந்தினாள்.

மாமன் மாமியர் முன்னிலையில் வருபனி கரந்த கண்ணளாகிய கண்ணகி -

*'கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே*
*குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே'*

எனக் கேட்டபோது,

*'பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்*
*திங்கள் முகிலொடுஞ் சேணிலம் கொண்டெனச்*
*செங்கண் சிவப்ப அழுதாள் தன்கேள்வனை*
*எங்கணா என்னா இனைந்து ஏங்கி மாள்குவாள்'*

எனத் துன்பமாலையில் தொடங்கியது அழுகை. ஊர்சூழ் வரியில், ஊரவர் மயங்க, கம்பலை மாக்கள் கணவனைக் காட்ட, காலைவாய், வண்டார் இருங்குஞ்சி மாலை தன் வார்குழல் மேல் கொண்டாள், மாலைவாய் புண்தாழ் குருதி, புறஞ் சோரக் கண்டாள்.

கண்டவள், ஊரவரையும் உயர்ந்தோரையும் தெய்வத்தையும் விளித்து -

*'என்றிவை சொல்லி அழுவாள் கணவன் தன்*
*பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள,*

கோவலன் எழுந்து நின்றான். எழுந்து, நிறைமதி வாண்முகம் கன்றியது என்றவள் கண்ணீர் கையால் மாற்ற அழுதேங்கி, நிலத்தில் வீழ்ந்து ஆயிழையாள் தன்கணவன் தொழுதகைய திருந்தடியைத் துணை இணைக்கையாற் பற்ற, எழுதெழில் மலர் உண்கண் இருந்தைக்கு' எனப் போனான்.

## கண்ணகி அடக்கிய கண்ணீர் மடை உடைந்தது

பிறந்தநாள் தொடங்கிக் கண்ணீர் அறியாது வாழ்ந்தவள் கண்ணகி. திருமணத்தின் பின் கண்ணீரே வாழ்க்கையாய் வாழ்ந்தபோதும், அதனை வெளியிற் சிந்தினால், கணவற்கும் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் இழுக்காகுமெனக் கண்ணீர் அடக்கிச் சிந்தாது வாழ்ந்தவள். கோவலன் கொலையுண்ட பின், கண்ணீரை அடக்குவது அறிவுடைமையாகாது எனக் கருதியமையால், அதனைச் சிந்தத் தொடங்கினாள். அதன் உச்சக்கட்டமாக, பாண்டியனின் அரண்மனை வாயிலில் நின்று, 'வாயிலோயே வாயிலோயே' என விளித்துத் தன் வருகையை உணர்த்தியதும், அது கேட்ட பாண்டியன், 'நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக்கொடியோய்' என வினவினான். காற்சிலம்பினை உடைத்துக் கோவலனின் தூய்மையை வெளிப்படுத்தியதும்,

*'தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்*
*பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்'*

எனக் கூறி இறந்தான். அதன்பின் காவி உகுநீரும் ஆவி போனது போன்ற உடலுமாக மதுரை வீதியிற் செல்ல, மதுரை எரிந்தது. பின்னர்,

*'கருத்துறு கணவற் கண்டபின் அல்லது*
*இருத்தலும் இல்லேன், நிற்றலும் இலன் எனக்*
*கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்*
*மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு என*
*இரவும் பகலும் மயங்கிக் கையற்று*
*நெடுவேற் குன்றம் அடிவைத்து ஏறி*

*பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்*
*வாடா மாமலர் மாரிபெய்து ஆங்கு*
*அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்தக்*
*கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு*
*கான ஊர்தி ஏறினள்.'*

## சிந்திய கண்ணீர் சொல்லும் சிந்தாத கண்ணீர்

முன்னர்க் கூறியபடி துன்பமாலையில் தொடங்கிய அழுகை, கட்டுரைக் காதை வரை நீண்டு செல்கின்றது. இவ்வளவு நீண்ட கண்ணீரைத் தானே சொரிந்து தானே துடைத்துக் கொண்டாள். துடைப்பதற்குக் கணவனோ, பெற்றோரோ, வேறு உற்றார், உறவினரோ யாருமில்லாத ஓர் அனாதை அவள்.

கண்ணகி சிந்தாத கண்ணீரைக் காட்டுவது கண்ணகி சிந்திய கண்ணீர்தான். எனவே அதனைக் காண்பதற்கு, அவள் சிந்திய கண்ணீர்ப் பெருக்கை, அதிலுள்ள உப்பைக் காணவேண்டும். துன்பமாலையில் தொடங்கி, அவள் சிந்திய கண்ணீரோடு வந்த கம்பலைகளை, நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அவை அவள் அடக்கிவைத்திருந்த துன்பத்தின் மாலைகள். மதுரை நிகழ்ச்சியின் பின்தான், அவள் துன்பப் பட்டாள் என்பது பொருளல்ல. திருமணத்திற்குப் பின்னர் அவளது மகிழ்ச்சியான வாழ்வு சிறிது காலமே நீடித்தது. அதன் பின்னர்,

*'மாமலர் நெடுங்கண் மாதவிமாலை*
*கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு*
*மண்மனை புக்கு மாதவி தன்னொடு*
*அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி*

*விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்*
*வடுநீங்கு சிறப்பின் மனை அகம் மறந்து.'*

என்ன குறைகண்டு மனையகம் மறந்தான்? கண்ணகியை விடுத்து மாதவி மீது விடுதல் அறியா விருப்பு ஏற்படுவதற்குக் காரணம் என்ன? வண்டோர் அனையர் ஆடவர் எனச் சமாதானம் கூறலாமா? எல்லாவற்றிற்கும் பொதுவான விதியைக் கூறி அமையலாமா? கோவலன் மதுரையிற் கொலையுண்டது பற்றிக் கேட்டபோதல்ல, காவிரிப்பூம் பட்டினத்திலேயே கண்ணகிக்குத் துன்பமாலை தொடங்கி விட்டது.

*'காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்வு எய்தத்*
*தாழ் துணை துறந்தோர் தனித்துயர் எய்த*
*மல்லல் மூதூர் மாலைவந்து இறுத்தது.'*

அந்த நேரத்தில் மாதவி இல்லத்தில் –

*'இல்வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த*
*பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து*
*செந்துகிர்க் கோவை சென்று ஏந்து அல்குல்*
*அம்துகில் மேகலை அசைந்தன வருத்த*
*நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்*
*கலவியும் புலவியும் காதலர்க் களித்து'*

இன்பக் களியாட்டம் ஆடிய காலையில், கண்ணகியோ தன் இல்லத்தில் –

*'அஞ்செஞ்சீறடி அணிசிலம்பு ஒழிய*
*மென்துகில் அங்குல் மேகலை நீங்கக்*
*கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்*
*மங்கல அணியின் பிறிது அணி மகிழாள்*

*கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்*
*திங்கள் வாண்முகம் சிறுவியர்ப்பு இரியச்*
*செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்*
*பவள வாள்நுதல் திலகம் இழப்ப*
*தவளவாள் நகை கோவலன் இழப்ப*
*மை அருங் கூந்தல் நெய் அணி மறப்பக்'*
கையறு நெஞ்சத்துக் கண்ணகியைக் காண்கின்றோம்.

**கண்ணகி சகித்த கவலைகள்**

கோவலன், மாதவிபாற் சென்று, விடுதல் அறியாவிருப் பினனாக, வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்து வாழ்ந்த காலத்திலேற்பட்ட துன்பமோ, மாதவியைப் பிரிந்து மாலையில் கண்ணகியிடம் வந்து, அவளையும் அழைத்துக் கொண்டு புகாரை நீங்கி மதுரைக்கு நடந்து செல்லும்போது ஏற்பட்ட வழி நடை வருத்தமோ, மதுரையில் மாதரியின் குடிசையில் உணவு சமைத்துக் கோவலனுக்குப் பரிமாறி உபசரித்த காலையில் அவளுக்கு ஏற்பட்ட கவலைகளோ, அவளை அதிகம் பாதிக்க வில்லை எனலாம்.

**கண்ணகியின் பொறுமையைப் பறித்த நிகழ்ச்சிகள்**

ஆனால் யாருக்காக இத்தனை துன்பங்களையும் பொறுத்துக் கொண்டாளோ, அந்தக் கோவலன் மீது பழி சுமத்தப்பட்டு அவன் கொல்லப்பட்டான் எனக் கேட்டபோது, முன்பு போலப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொங்கி யெழுந்தாள். கோவலனை இழந்த துன்பத்தோடு நோக்கும் போது, முன்னைய துன்பங்கள் துன்பங்களாகவே இல்லை. காரணம் கோவலனும் தன்னோடு உடன் வருகிறான் என்னும் ஓர் அற்ப மகிழ்ச்சிதான்.

கோவலன் பிரிவால் இவள் இழந்தது உடலுறவல்ல.

*'அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க் கெதிரலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'*

என்கின்றபோது, ஒரு கற்புள்ள குடும்பப் பெண்ணின் சிந்தனையைக் காண்கின்றோம். இந்த வரிகளில் கண்ணகியின் சிந்தாத கண்ணீரைக் காண்கின்றோம்.

கோவலன் மனையகம் மறந்து, மாதவியோடு வாழ்ந்த போதும், கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகளாக வாழ்ந்தவள் கண்ணகி.

அவள் எந்நிலையிலும் கோவலனை வெறுத்தவளல்ல. அவள் வெறுப்பு என்னும் உணர்வினை வென்று விட்டவள். அவளால் வெறுக்க முடியாது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்பு நிறைந்தவள் அவள்.

மாதவியைப் பிரிந்து வந்த கோவலன் மதுரையில் மாதரி இல்லத்தில், கண்ணகி அவளுடைய -

*'மெல்விரல் சிவப்ப திருமுகம் வியர்ப்பச் செங்கண் சேப்ப*
*கரிபுற அட்டில் கண்டனள் பெயர*
*வைளரி மூட்டிய ஐயை தன்னொடு*
*கையறிமடைமையிற் காதலர்க்கு ஆக்கி*
*கடிமலர் அங்கையிற் காதலன் அடிநீர்*
*சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி*
*தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவி*
*குமரிவாழையின் குருத்தகம் விரித்து ஈங்கு*
*அமுதம் உண்க அடிகள் ஈங்கு என'*

கோவலனை உபசரித்தபோது அவள் அடக்கி வைத்திருந்த கவலைகள் எத்தனை? கண்ணீர்கள் எத்தனை? இத்தனை நாளும் தன் கையால் சமைத்து உணவு பரிமாற முடிய வில்லையே என ஏங்கிய ஏக்கங்கள் எத்தனை?

உணவு கொண்ட கோவலன், தன் தவறு உணர்ந்தவனாய் -

*'மை ஈர் ஓதியை வருக எனப் பொருந்திக்*
*கல்லதர் அத்தம் கடக்க யாவதும்*
*வல்லுந கொல்லோ மடந்தை மெல்லடி'*
*எனக் கண்ணகிக்கு இரங்கியதோடு,*

*'வெம்முனை அருஞ் சுரம் போந்ததற்கு இரங்கி*
*எம்முதுகுரவர் என்னுற்றனர் கொல்?*
*மாயம் கொல்லோ வல்வினை கொல்லோ?*
*யானுளம் கலங்கி யாவதும் அறியேன்'*

எனக் கூறிக் கலக்கமுற்று,

*'வறுமொழியாளரொடு வம்பப் பரத்தரொடு*
*குறு மொழிக் கோட்டி கொடுநகை புக்குப்*
*பொச்சாப்புண்டு பொருள் உரையாளர்*
*நச்சுக் கொன்றேற்கு நன்னெறி உண்டோ*
*இருமுதுகுரவர் ஏவலும் பிழைத்தேன்*
*சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்*
*வழு எனும்பாரேன்'*

என மேலும் நொந்தான். அப்படி இருப்பவும், **''எழுகென எழுந்தாய் என் செய்தனை''** எனக் கோவலன் தன் தவறு உணர்ந்து வருந்தியபோது, கண்ணகியின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்? அவள் உள்ளம் எவ்வளவு கண்ணீரைச் சிந்தாமல் சிந்தியிருக்கும்? அந்த ஊமைக் குரலை, உள்ளக்

குமுறலை, அவள் உள்ளம் சிந்தாமல் சிந்திய கண்ணீரை, யார் அறிவார்? காமம் கடந்து, காதலும் கடந்து, அன்பு நிலையையும் கடந்து, அருள் நிலைக்கு வந்துவிட்ட கண்ணகிதன் நிலை கண்டு இரங்கிய கோவலன் பெற்றோர்,

*'அன்புளம் சிறந்தாங்கு அருள்மொழி அளைஇ*
*எற்பாராட்ட யானகத்து ஒளித்த*
*நோயும் துன்பமும் நொடிவது போலுமென்*
*வாய் அல் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்த'*

என்று கண்ணகியின் பொறுமையினைப் பாராட்ட, கண்ணகியோ தன் அகத்து ஒளித்த நோயையும் துன்பத்தையும் வாய் அல் முறுவலால் காட்ட, அதனை அறிந்து அம் முதியோர் மேலும் வருந்தினர். கண்ணகி நல்லாளின் இப்பெருந்தன்மை, அவளின் சிந்தாத கண்ணீரைக் காட்டுகின்றதல்லவா?

**கண்ணீர் மறைத்த கண்ணாள்**

வசதிமிக்க வாழ்வைத் துறந்து, நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும் பேணிய கற்பும் பெருந்துணையாகக் கோவலனுடன் சென்று, அவன் துயர் களைந்த பெருந் தன்மை கண்டு -

*'பொன்னே கொடியே, புனைபூங் கோதாய்*
*நாணின் பாவாய் நீணில விளக்கே*
*கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி'*

*என அன்புமழை பொழிந்தபோதும்,*

*'சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான்போய்*
*மாறி வருவன் மயங்கா தொழிக'*

எனக் கூறி -

*'கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை*
*ஒருங்குடன் தழீஇ உழையோர் இல்லா*
*ஒருதனி கண்டு தன் உள்ளகம் வெதும்பி*
*வருபனிகரந்த கண்ணன் ஆகிப்*
*பல்லான் கோவலன் இல்லம் நீங்கி'*

வல்லா நடையின் மறுகிற் சென்ற போதும், கண்ணகி கத்திக் கதறவில்லை. ஆனால் அவள் உள்ளம் எத்தனை வேதனைப் பட்டிருக்கும்? எத்தனை கண்ணீரைச் சொரிந்திருக்கும்? மாமன் மாமியர் வருந்துவரே என வாயல் முறுவல் பூத்த கண்ணகி, தன் கணவன் ஒரு வேலையின் நிமித்தம் புறப் படும்போது, தன் கவலையைக் காட்டி அபசகுனமாக நடக்க எண்ணுவாளா? ஆனால் மகிழ்ச்சியாக அவனுக்கு விடை கூறி அனுப்ப முடியுமா? இந்த நிலையில் அவள் உள்ளம் சொரிந்த கண்ணீரை யாரறிவார்?

## கண்ணகி செய்த புரட்சி

கணவனை இழந்த நிலையில் ஊதுலை தோற்க உயிர்க்கும் நெஞ்சோடு, தன் கேள்வனை, எங்கணாஅ என்னா இனைந்து ஏங்கி, கணவனை இழந்த பெண்டிர், கைம்மை பூண்டு ஒழுகுவது போல யானும் அவலங் கொண்டழிவலோ? அல்லது, அன்பனை இழந்தோர், துறை பல மூழ்கித் துயர்உறு மகளிர் போல யானும் அவலம் கொண்டழிவலோ? அன்றி, கணவனை இழந்தோர் கைம்மை பூண்டு கவலை கொண்ட மகளிரைப் போல இம்மையும் இசைஇரீஇ இனைந்து ஏங்கி அழிவலோ? எனக் கூறுவதன் மூலம், உலகவர் மேற்கொள்ளும் இந்த வழக்கங்களையெல்லாம் உடைத் தெறியும் ஒரு புரட்சியைக் காண்கின்றோம். இத்தகைய

புரட்சி மனப்பான்மைக்குக் கண்ணகி உள்ளத்தடங்கியிருந்த கண்ணீரும் கம்பலையுமல்லவா காரணம்? சிந்தாத கண்ணீர் அல்லவா காரணம்?

## தெய்வம் தொழாத கண்ணகி

சமயம் கூறும் இருவினை ஒப்புநிலையை அவள் எப்போதோ அடைந்து விட்டாள். விருப்பு வெறுப்பற்ற சமநிலையை அவள் எப்போதோ அடைந்து விட்டாள். உலகப் பயன்களுக்காகத் தெய்வத்தை வேண்டும் நிலையை அவள் எப்போதோ கடந்து விட்டாள்.

அதனால், தோழி தேவந்தி என்பாள்,

*'பொற்றொடீஇ!*

*கைத்தாயும் அல்லை* (நீ உன் கணவனுக்குக் கைத்துப் போனவளும் அல்லை) *கணவர்க்கு ஒரு நோன்பு பொய்த்தாய் பழம்பிறப்பில், போய்க் கெடுக.*

*சோம குண்டம், சூரிய குண்டம் துறைமூழ்கிக்*
*காம வேள் கோட்டம் தொழுதார் கணவரொடு*
*தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்*
*போகம் செய்பூமியினும் போய்ப்பிறப்பர் யாம் ஒருநாள்*
*ஆடுதும் என்ற அணி இழைக்கு அவ் ஆய் இழையாள்*
*பீடு அன்று'*

என இரத்தினச் சுருக்கமாகப் பதிலிறுத்தாள்.

## கண்ணகி ஒரு புதுமைப்பெண்

இத்தனை தெளிவான உள்ள உறுதியுடைய ஒரு பெண், மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடக்கும் இந்தத் தமிழ்நாட்டில் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாள் என்பது

நம்ப முடியாத செய்தியாக அல்லவா இருக்கின்றது! இந்த இடத்தில் காரைக்காலம்மையாரையும் நாம் நினைவு கொள்ள வேண்டும்.

முல்லைத் திணையில் துன்பம் பொறுத்திருத்தலும், பாலைத் திணையில் பாலையின் வெம்மை தாங்கி உடன் போதலும், நமது அகப்பொருள் கூறும் மங்கையர் மாண்பு. இவையெல்லாம் பெண்ணின் பெலவீனத்தால், பிறந்தகத்து வறுமையால், கணவனன்றித் தஞ்சம் இல்லா நிலைமையால் ஏற்பட்டவையல்ல. அன்பின் முதிர்வில் பிறக்கும் அருஞ் செயல்கள். காமமும் காதலும் கடந்த நிலையில் தோன்றும் கற்புநிலை.

எப்பொழுது கோவலன் மாதவிபாற் சென்றானோ, அப்போதே கோவலன், கண்ணகியின் உள்ளத்தில் கணவன் என்ற நிலையில் இருந்து மாற்றமடையத் தொடங்கி விட்டான். கோவலன் பிரிவு கண்ணகிக்குக் கவலையை அளித்ததே தவிர ஊடலை வருவிக்கவில்லை; வெறுப்பை விளைவிக்கவில்லை.

**தாயாய் மாறிய கண்ணகி**

ஒரு குற்றிழையாள், காவலன் போலும் கடைத்தலைவாய் வந்துநம் கோவலன் என்றாள். கோவலனும் பாடு அமை சேக்கையுள் புக்குத் தன்பைங்கொடி வாடிய மேனி வருத்தம் கண்டு, யாவும் சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக் குலம்தரு வான் பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத் தரும் எனக்கு என்றான். சாதாரண பெண்ணாயின் இந்த நிலையில் கதவையடைத்து, அவன் வரவைத் தடுத்திருப்பாள்; திட்டித் தீர்த்திருப்பாள். அவனது பணி

மொழி, சாதாரண எந்தப் பெண்ணுக்கும் செயற்படுத்த முடியாத, அடங்கியிருந்த ஆத்திரத்தைக் கிளறி விட்டிருக்கும். கைக்கிளை மகளிரோ, பெருந்திணைப் பெண்டிரோ அங்ஙனமே நடந்திருப்பர்.

யாவதும் மாற்றா வாழ்க்கையளாய் அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தில் வாழ்ந்த கண்ணகியினால், அப்படியெல்லாம் ஒழுக முடியவில்லை. ஏன்?

அதுதான் முடியவில்லை; ஊடுதல் காமத்துக்கு இன்பம் அல்லவா? ஊடியிருக்கலாமே என்றால் அவள் காமம் கடந்து விட்டாள். அதனாலேயே கோவலன் மீண்டும் வந்தபோது அவளால் கோபம் கொள்ள முடியவில்லை; ஊடல் கொள்ள முடியவில்லை. இவையெல்லாம் காமத்தின் வெளிப்பாடு களல்லவா? அப்படியானால் இந்நிலையில் கோவலன் கண்ணகி உறவு எத்தகையது? கண்ணகிக்குக் கோவலன் மகனாய் விட்டான். திருமணமானதும் கணவன் மனைவியின் முதல் குழந்தை. அவள், கணவனின் முதல் குழந்தை என்பதும் ஓர் உண்மையல்லவா? இந்த நிலையை அவள் அடைந்த படியினால்தான், அதாவது தாய்மை நிலையை அடைந்திருந்த காரணத்தினால்தான் அவளால் கோவலனை வெறுக்க முடியவில்லை. ஒரு பெண் தாய்மையடையக் குழந்தைகளைப் பெற வேண்டுமென்பதில்லை. மூன்று வயதுச் சிறுமியிடமும் தாய்மையின் செயற்பாடுகளை நம் வீடுகளில் காணலாம். கண்ணகி, கோவலனை மகனாக மனத்தில் வரித்துக் கொண்ட காரணத்தினாலேதான், கோவலனை வெறுக்க முடியவில்லை. அவன் மீது கோபம் கொள்ளவில்லை. ஊடல் என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை.

மகனின் தவறுகளைத் தாய் பொறுத்துக் கொள்வது மாத்திரமல்ல, மூடி மறைத்தும் கொள்வாள். பிறர் தன் மகன் மீது குற்றம் கண்டால் அவர் மீது சீறிப் பாய்வாள்.

*'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி'*

எனுமொரு குறளுண்டு.

மகன் செய்யும் எத்தகைய குற்றத்தையும் தாய் பொறுத்துக் கொள்வாள். கணவனோ வேறு யாருமோ செய்தாலும் பொறுத்துக் கொள்ள மாட்டாள்.

பள்ளிக்குப் போகான்; கூடாத கூட்டாளிகள் கூடுவான்; வயது வந்தும் வேலை வெட்டி தேடான். குடியும் கும்மாளமுமா யிருப்பான். குடித்து விட்டு வந்து நல்ல உணவில்லை எனத் தாயை அடிப்பான். அப்போதும் அந்தத் தாய் பொறுத்துக் கொள்வாள். அது மட்டுமா? அடி வாங்கிக் கொண்டு நான் பெத்தவனுக்கு எவ்வளவு பெலம்! என்று மனத்துள் எண்ணி ஓர் அற்ப மகிழ்ச்சியும்கூட அந்த ஏழைத் தாய்க்கு இருக்கும்.

அவளால், மகன் குடித்திருப்பதை நம்ப முடியவில்லை. ஆனால், மகன் குடிக்கிறான் என்று அறிந்தவுடன், எதையும் பொறுத்துக் கொண்ட தாயால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாதாம்; வள்ளுவர் சொல்கிறார்.

## கண்ணகி அறிவற்ற பெண்ணா?

மகனாகிய கோவலன் செய்த எல்லாத் தவறுகளையும் பொறுத்துக் கொண்ட அந்தத் தாய்மை, கோபம் கொள்ளாதது மட்டுமல்ல, இலம்பாடு நாணுத் தரும் எனக்கூறிய கோவலனுக்கு நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்

சிலம்புள கொண்ம் எனக் கூறினாள். கூறியது மட்டுமின்றி உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்தசீர் மாடமதுரை யகத்துச் சென்று, என்னோடு இங்கு ஏடுஅலர் கோதாய் எழுக என அவன் அழைக்க, கங்குல் கனைசுடர் கால்சீயா முன் இருவரும் புகாரை விட்டுப் புறப்பட்டனர்.

கண்ணகி என்ன அத்தனை அறிவற்ற பெண்ணா? தவறு செய்து வந்தவனை ஏற்றுக் கொண்டதும், சிலம்பு கொடுத்ததும், உடன் போகப் புறப்பட்டதுமான செயல்கள் எங்ஙனம் அறிவுடைமையாகும்? விதி என்று சொல்லி அமைதி காண்பது ஒருபக்கம் இருக்கட்டும்.

*'வினை கடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்*
*கனை சுடர் கால் சீயா முன்'*

என்றே இளங்கோ அமைதி காண்கிறார். அதில் உண்மை யுண்டு. கண்ணகியைப் பொறுத்தவரை, விதி இப்படிச் செய்விக்கிறதென்பதல்ல; ஒரு தாய் தன் மகனைக் காப்பாற்ற எதையும் செய்வதைப் போலத் தன்னலமற்ற கண்ணகியின் தாயன்பே இங்ஙனம் தன்னை மறந்து அவளைச் செய்யத் தூண்டியது.

## கோவலனை உருக்கிய கண்ணகி

கணவன், மனைவியாக இல்லறத்தில் புகுந்த கண்ணகி, மாதவியிடம் கோவலன் போன பின், இறுதிவரை தாம்பத்திய உறவற்றே வாழ்ந்தாள். அது அவளுக்கு ஓர் இழப்பல்ல; அது அவளுக்கு முக்கிய தேவையுமல்ல. பெண்களுக்கு இயல்பாக வுள்ள மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு முதலிய குணங்களால் கண்ணகி ஆன்ம பக்குவம் பெற்றுவிட்டாள். இதனைக் கோவலனும் உணர்ந்து விட்டான். திரும்பி வந்தான்;

திருந்தியே வந்திருந்தான். மாதவியுடன் சென்ற கோவலன் வேறு, அவளை விட்டு வந்த கோவலன் வேறு. சென்றவன் தன்பிழையுணராக் கோவலன்; வந்தவன் தன் தவறுணர்ந்த கோவலன். எப்போது ஒருவன் தன் தவறுணர்ந்து அதனை ஒப்புக் கொள்கிறானோ, அப்போதே அவன் திருந்திவிட்டான் என்பது பொருள்.

தன் தவற்றினை உணர்ந்தவன், 'சிறு முதுக்குறைவிக்குத் தீமையும் செய்தேன்' எனக் கூறினான். திருமணம் முடித்த போது கண்ணகிக்கு வயது பன்னிரண்டு.

அத்தகைய இளைய பருவத்தவளாய் இருந்தபோதும், அறிவு முதிர்ச்சியோடு அவள் நடந்து கொண்டது அவனை உருக்கி விட்டது.

## ஆட்பட்டு ஆனந்தித்த கண்ணகி

நாற்குணங்களும் குலச்சிறப்பாக வாய்க்கப்பெற்ற அவள், அடங்கி, வாழ்ந்தாளேயன்றி, அடக்கப்பட்டு வாழ்ந்தவளல்ல. திருமணத்துக்கு முன் பெற்றோராலோ, திருமணத்திற்குப் பின் கணவனினாலோ அவள் அடக்க்ப்பட்டதாக எவ்வித குறிப்புமில்லை. பிரச்சினைகளைத் தாங்கும் சக்தியை அவளது உள்ளமும் உடலும் பெற்றிருந்தன.

அதனாலேயே வயது பன்னிரண்டில் திருமணத்துக்குட் படுத்தும் வழக்கம் அன்று ஏற்பட்டது.

உலகவர் பார்வைக்குக் கணவன் மனைவியாக வாழ்ந்தாளேயன்றி, உண்மையில் காமம் கடந்த அருள்நிலை நோக்கிக் கடவுள் நிலை நோக்கி அவள் வளர்ந்து கொண்டு போனாள்.

தன் வாழ்வில் குறுக்கிட்ட மாதவி மீது அவள் சீற்றம் கொள்ளவில்லை. கோவலனைக் கொன்ற பாண்டியன் மீது சீற்றங் கொண்ட அவள்,

*'நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்*
*வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமின்*
*யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த*
*கோநகர் சீறினேன் குற்றமிலேன்யான்'*

எனக் காரணம் கூறினாள். அப்போது கண்ணகிமுன் மதுரா பதித் தெய்வம் தோன்றி, அவளது வரலாறும் கோவலன் செய்த பழியும் கூறியது. சீற்றம் தணிந்தவள் திருச்செங்கோட்டில் கணவனைக் கூடினாள்.

**ஊர்சூழ்வரி, அவள் சிந்தாமல் சிந்திய கண்ணீர்**

*'நிறையுடைய பத்தினிப் பெண்டிர்காள்*
*பட்டேன், படாத துன்பம் படுகாலை*
*உற்றேன், உறாதது'*

எனக் கண்ணகி கூறுகின்றாள். அவள் உற்ற துன்பம் எது? கணவனை இழந்தது மட்டுமா? அதற்கு முன் அவனைப் பிரிந்து அவள் பட்ட, படாத துன்பம் யாருமே படக்கூடாத துன்பம். அந்த நேரத்தில் அவள் அடக்கி வைத்திருந்த துன்பம், அவள் சிந்தாமற் சிந்திய கண்ணீர். அதுவே ஈதொன்று, ஈதொன்று என ஊரவர் கேட்கும் ஊர்சூழ் வரியாயிற்று.

சிலப்பதிகாரத்தின் காலம் இலங்கைக் கயவாகு மன்னனின் காலமாகிய கி.பி. 2ம் நூற்றாண்டென்பர் சிலர்; வேறு சிலர் கி.பி. 13ம் நூற்றாண்டென்பர்; கால ஆராய்ச்சி இங்கே வேண்டா.

சிலம்பு தோன்றி இன்றுவரை அது பற்றி ஏறக்குறைய நூற்றுக்கணக்கான நூல்களும் ஆயிரக்கணக்கான கட்டுரைகளும் வெளிவந்துவிட்டன. மேலும் இச்சிலம்பு இந்திய மொழிகளிலும், மேல்நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

அவற்றுளெல்லாம் பெரும்பாலும் கண்ணகி உயர்ந்த மானிடமகளாகப் பிறந்து, தெய்வமாக வணங்கப்பட்டதாகவே காட்டப்பட்டுள்ளது. இலட்சியப் பெண்களுள் ஒருத்தியாகத் தலைசிறந்தவளாகவே போற்றப்பட்டு வந்துள்ளாள்.

**கற்புடை மகளிரின் தீ**

பெண்களைப் பொறுத்தவரை அவர்களுடைய கல்வி யழகு, ஆற்றல் முதலியவற்றை விட, கற்பே சிறப்பாகக் கதைக்கப் பட்டது. இந்தக் கற்பு, காவலன் காவல் இல் எனில் இல் என்றும், உயிரினும் சிறந்தன்று நாண், அதனினும் சிறந்தன்று கற்பு என்றும் பேசப்பட்டுள்ளது. மேலும் கற்பு முதற்கற்பு, இடைக் கற்பு, கடைக்கற்பு என மூன்றாகவும் வகுக்கப்பட்டுள்ளது. பிறர்நெஞ்சு புகாத நிலை, முதற் கற்பெனப் போற்றப்பட்டது.

ஒரு பெண் தன் கணவனல்லாமல் மற்றொருவனால் காதலிக்கப்படுவாளானால் அது அவன் தவறல்ல, அவள் தவறு என்றே கருதப்பட்டது. ஏனெனில் அவனது உள்ளத்தில் காமக் குறிப்புத் தோன்றுவதற்கு இவளே காரணம்; அவனிடத்துத் தெய்வீக உணர்வை இவள் ஏற்படுத்தியிருக்க வேண்டும்; இவளது நடைஉடை பாவனையே காமத்தைத் தூண்டியுள்ளன எனக் கருதப் பட்டது.

கண்ணகியை வருணிக்கும் போது தீதிலா வடமீனின் திறம் இவள் திறமென்றும் மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் எனவும் இளங்கோ கூறினார்.

தமிழக அமைச்சர் ஒருவர், ஜானகி அம்மாவைப் பார்த்தால் கும்பிட வேணும் போலிருக்கும் என்றும், வேறொரு அம்மாவைப் பார்த்தால் கூப்பிடவேணும் போலிருக்குமென்றும் ஒரு கூட்டத்தில் கூறினார். இது, ஒரு பெண் தெய்வீக உணர்வை உணர்த்துவதையும், மற்றொரு பெண் காமத் தீயைக் கிளறுவதையும் காட்டுகின்றது.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல உணர்வும் ஒரு பெண்ணிடத்தேயுண்டு.

எனவே இவற்றிற்கு மூலமான ஐம்பூதங்களும் அவளிடமுண்டு. கண்ணகியிடமுள்ள தீயே மதுரையை எரித்தது.

*இடமுலை கையால் திருகி மதுரை*
*வலமுறை மும்முறை வாரா, அலமந்து*
*மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து*
*விட்டாள் எறிந்தாள்.*

அப்பொழுது,

ஏவல் தெய்வத்து (ஏவலால்) எரிமுகம் திறந்தது. இந்தத் தீயினைத் திறந்தது எந்தத் தீ; அது

'முதிரா முலைமுகத்து எழுந்த தீ.'

மகளிர் முலைமுகத்து ஒரு தீயுண்டு என்பது அனுபவத் தாலும் காம நன்னூலாலும் அறியப்படும். அந்தத் தீயே மதுரை மூதூர் மாநகர் சுட்டது. இதுவே கொங்கைப் பூசல்.

## பெண் நிலைவாதிகளின் கூச்சல்

கோவலன் -

*'சலம் புணர்கொள்கைச் சலதியோடாடி,*
*குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்து*
*வறுமொழியாளரொடு வம்பப்பரத்த ரொடும்*
*குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்*
*பொய்ச் சாப்புண்டு பொருள் உரையாளர்*
*நச்சுக் கொன்று'* -

வாழ்ந்த காலையும், கண்ணகி நல்லாள், நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்ம் எனக் கூறி ஆறிய கற்பினால் வாழ்ந்தகாலையும், மதுரை மாநகரில் குற்றமற்ற தன் கணவன் மேல் பழிசுமத்திக் கொலை குறித்தபோது சீறிய கற்பினளாய் வாழ்ந்தகாலையும், கண்ணகியின் அசாதாரண இரு வேறு நிலைகளைக் காண்கின்றோம்.

கோவலன் மாதவியோடு கூடி, மனையகம் மறந்து வாழ்ந்த காலை, ஆணாதிக்கத்துக்குட்பட்டு அடங்கி வாழ்ந்தாள் என்றும், அதனாலேயே எவ்வித எதிர்ப்புமின்றி வளமான பிறந்தகத் துக்குக் கூடப் போகாமல், வயது போன மாமன் மாமியரோடு வாழ்ந்தாள் என்றும் பெண்நிலைவாதிகள் காரணம் கூறக்கூடும்.

## ஆறிய கற்பும் சீறிய கற்பும்

பண்பாட்டினால் வந்த அடக்கத்திற்கும் பயத்தினால் வந்த அடக்கத்திற்கும் வேறுபாடு அறியாதார் கூறும் கூற்று இதுவாகும். மாதவியைப் பிரிந்து வந்து, தன் குறைக்கிரங்கி, இலம்பாடு நாணுத் தருமென நாணிய போதும், எவ்வித வெறுப்போ, கோபக்குறிப்போ காட்டாது நலங்கேழ் முறுவல்

நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்ம் எனக் கூறியது கணவனிடம் அவளுக்குள்ள அன்பைக் காட்டுமேயன்றி, அறியாமையின் அறிகுறியல்ல. அவள் காமம் கடந்து காதலும் கடந்து அன்பு நிலைக்கு வந்துவிட்டாள். இந்த நிலையைப் புரிந்து கொள்ளும் அறிவின் மதுகையை, தமிழ்ச் சான்றோர் போற்றிய விழுமியச் சிறப்பை உணராதவர்கள், கண்ணகியின் ஆறிய கற்பினைப் புரிந்து கொள்ளாதது வியப்பல்ல.

இதனையே சிலப்பதிகாரச் செய் - உள் எனப் பாரதி கூறினான்.

கண்ணகி புகழ் நிறைந்த பத்தினி. அவளை உயர்ந்தோர் ஏத்துவர். உயர்வற்றோர், தாழ்ந்தோர் ஏத்தார். உலகில், என்றும் உயர்ந்தோர் சிலராகவும், தாழ்ந்தோர் பலராகவுமே இருப்பர். எனவே கண்ணகியைப் புரிந்து கொள்ளக் கூடிய வர்கள் மிகச் சிலரே; ஏனெனில் கண்ணகி ஒரு தத்துவம். அவள் இந்த உலகத்துக்கு ஒரு செய்தியை வாயாற் சொல்லாமல் வாழ்ந்து காட்டி விட்டுப் போயிருக்கிறாள்.

கண்ணகி ஒரு தத்துவத் தளத்தில் நின்றே ஆறி வாழ்ந்தாள். அதுபோலச் சீறி வாழ்ந்த போதும் ஒரு தத்துவத் தளத்தில் நின்று தான் சீறினாள். குற்றமற்ற கணவன் மீது பழி சுமத்தப்பட்ட போது, குற்றம் சுமத்திக் கொன்றவன் மாமன்னன் என்றும் பாராது, தனித்தவள் தான் என்றும் அஞ்சாமல் சீறியவள், குற்றமற்ற தன்னைப் பிரிந்து மாதவியோடு சென்று மனையகம் மறந்த காலை, கோவலன் மீது ஏன் சீறவில்லை?

சாதாரண ஒரு பெண்ணாயிருந்தால் தனக்குத் துரோகம் செய்த கோவலன் மீதும், தன் காதற்கணவனைக் கவர்ந்த

மாதவி மீதும் சீறியிருப்பாள். அந்தச் சீற்றத்தினை எது தடுத்தது? பண பலம், ஆட்பலம் இல்லாத அனாதையா அவள்?

அதனைத் தான் செய்யவில்லையென்றாலும், கணவனால் புறக்கணிக்கப்பட்டபின், புகுந்த வீட்டில் இருந்து மாமன் மாமியாருக்குத் தொண்டு செய்யத் தூண்டியது எது? ஆணாதிக்கமா? அச்சமா? வளம் மிக்க பிறந்த அகத்துக்குப் போகத் துணியாது தடுத்தது எது?

கண்ணகி போன்றோரால் அந்தக் கீழ் எல்லைக்கு இறங்கி வர ஒருபோதும் முடியாது.

ஏனெனில் அவர்கள் நாணமுடையவர்கள். இந்த நாண், கருமத்தால் நாணும் நாணல்ல, திருநுதல் நல்லவர் நாண். இவற்றினை வள்ளுவர் காட்டும் நாணுடைமையிற் காணலாம்.

**திருக்குறளும் கண்ணகியும்**

கண்ணகி போன்ற மேன்மக்களின் செயற்பாடுகளின் உரைகல் திருக்குறளேயாகும். வள்ளுவர் சான்றாண்மை என ஓர் அதிகாரமும் அடுத்துப் பண்புடைமை என ஓர் அதிகாரமும் அருளியுள்ளார்.

சான்றாண்மை என்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய பல குணங்களால் நிறைந்து நிற்பது மாத்திரமல்ல, அவற்றை ஆளும் தன்மை உடைமையும் அதனுள் அடங்கும் எனப் பரிமேலழகர் உரை செய்வார். பண்புடைமை என்பது சான்றாண்மைக் குரிய குணங்களில் வழுவாது நின்று, எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல் என விளக்குவார்.

சான்றாண்மைக் குணங்களிருந்தும், அவற்றை ஆளும் தன்மை அற்றவராக ஒருவர் இருக்கக்கூடும். அவர் சான்றோரார். அவை யிரண்டுமிருந்தும் பண்புடைமை அற்றவராக ஒருவர் இருக்கக் கூடும்.

ஆனால் பண்புடையாரிடம், சான்றாண்மை முதலியன எல்லாம் அமைந்திருக்கும்.

கண்ணகி சான்றாண்மை மாத்திரம் உடையவளல்ல; பண்பும் உடையவள். பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் என்கிறது கலித்தொகை. சான்றோர், உலகியல் உணர்ந்து பாடறிந்து ஒழுகத் தெரியாதவராயுமிருப்பர். ஏனெனில் அவர்கள் தடித்த இலட்சியவாதிகள். அதனாற்றான் 'என் மற்றுச் சான்றோர் முகத்துக் களி' என்றார் வள்ளுவர். சிறிய குற்றத்தையும் பொறுக்காதவர், கள் உண்டலைச் சகிப்பாரோ?

அதனால்தான் கண்ணகிக்கு ஏற்பட்ட அநீதியைக் கண்டும், யாரும், அவளுக்கு ஆறுதல்கூற முன்வரவில்லை.

*'என்னுறு துயர்கண்டும் இடருறும் இவள் என்னீர்*
*பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ*
*மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு*
*என்னுறுவினை காண் ஆஇது என உரையீரோ?*
*யாருமில் மருள்மாலை இடருறு தமியேன் முன்*
*தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ*
*பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப*
*ஈர்வது ஓர்வினைகாண் ஆஇது என உரையீரோ*
*கண்பொழி புனல் சோரும் கடுவினை உடையேன்முன்*
*புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ*

*மன்பதை பழிதூற்ற மன்னன் தவறிழைப்ப*
*உண்பதோர் வினைகாண் ஆஇது என உரையீரோ?'*

## சிலம்பு காட்டும் மதுரையும் இன்றைய தமிழகமும்

இங்ஙனம் கண்ணகி ஆற்றாது அரற்றவும், அவளுக்கு ஆறுதல் கூற யாரும் முன்வரவில்லை. மதுரை மாநகரில் சான்றோர் இருந்திருந்தால் முன்வந்திருப்பார். சான்றோர் இல்லாமலில்லை; இருந்தனர். பல நற்குணங்கள் வாய்ந்த வர்களாயுமிருந்தனர். ஆனால் அவற்றை ஆளுந்தன்மை அற்றவராய் இருந்தனர். 'நமக்கேன் ஐயா வீண்வம்பு. யார் ஐயா மாட்டிக்கிட்டு அலையிறது; கண்டுக்காமல் போங்க ஐயா. இதெல்லாம் சகஜம் ஐயா!'' இந்த நிலைமை தென்னகத்து அறிஞரிடம் இன்றும் தலைதூக்கி நிற்கின்றது. அதுவே வீரப்பன் போன்ற தாதாக்கள் தலை தூக்குவதற்குக் காரணமாகின்றது. அரற்றித் தேடிய கண்ணகிக்குக் கம்பலை மாக்களே கணவனைக் காட்டினர். சந்தனக் கடத்தல் வீரப்பன் போன்றவர்தான் அன்றும் துணை.

## துரோணர் உத்தமரா?

திரௌபதையைத் துகிலுரித்த போது, அந்தச் சபையில் துரோணர் முதலிய சான்றோர் பலர் இருந்தனர்.

*'என்ன கொடுமையிது' என்று பார்த்திருந்தாரேயன்றி*
*வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்*
*தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே*
*பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்*
*நெட்டைமரங்களென நின்று புலம்பினார்*
*நின்னை எவரும் நிறுத்தடா என்பதிலர்*
*என்செய்கேன்'*

எனத் திரௌபதை அழுதபோதும், அந்தச் சான்றோர் பார்த்திருந்தனர். ஏன்? நற்குணங்கள் பலகற்றும், கேட்டும், நிரம்பியிருந்தும், ஆளுதல் தன்மை அவர்களிடம் இல்லை. இருந்திருந்தால், நெட்டை மரங்களென நின்று புலம்பாமல், நிறுத்தடா எனத் தடுத்திருப்பர்.

**அடக்கம் அமரருள் உய்க்கும்**

அதனால்தான் கண்ணகி -

*'சான்றோரும் உண்டு கொல்?*
*சான்றோரும் உண்டு கொல்?'*

எனப் புலம்பி அழுதாள். கண்ணகி சான்றாண்மையும் பண்பாடும் ஒருசேர வாய்க்கப் பெற்ற காரணத்தால், ஆற வேண்டிய இடத்தில் ஆறி, சீற வேண்டிய இடத்தில் சீறினாள். கண்ணீரைச் சிந்தாத இடத்தில் சிந்தாது, சிந்த வேண்டிய இடத்தில் சிந்தினாள்.

தமிழினம் காலங்காலமாகப் போற்றி வந்த விழுமியங்களை அறியும் வாய்ப்பும் உதவியுமற்ற நவீன சிந்தனையாளர்கள், அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதை அறியார்.

அம்பை என்னும் எழுத்தாளர், தன் கணவன் தன்னை ஏகவசனத்தில் அழைப்பதால், தானும் அவனை ஏக வசனத்தில் அழைப்பதாகக் கொழும்பில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறினார். அவன் தன்னை அடியே! என்றால் தானும் அவனை அடே! என்பாராம். அதில் என்ன தவறு? என்பது அவர் வாதம். அதில் தவறு இல்லை; அதில் பண்பாடு இல்லையே!

பண்புடையாராலேதான் உலகம் இயங்குகிறது

பண்புடையார்ப்பட்டுண்டு உலகு. உலக இயக்கம் என்பது, அம்பை போன்றவர்களாலல்லக் கண்ணகி போன்ற வர்களால் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கண்ணகி போன்றாரைப் புரிந்து கொள்வதற்கு, நுண்மாண் நுழைபுலம் மாத்திரம் போதாது; இறைவனை **''வாசித்துக் காணொணாதது, பூசித்துப் பேணொணாதது''** என அருணகிரியார் கூறியது போலவும்,

சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க எனவும்,
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க எனவும்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படா அன்
கண் முதற் காட்சியு மில்லேன் எனவும்,
இந் தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அந்தந்திரத்தி னவ்வயி னொழித்தும் எனவும்,

கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும் எனவும் மணிவாசகர் அருளியது போல, இவர்களை உணர்வதற்கு ஓர் ஆன்ம பக்குவம் வேண்டும். அஃதில்லாதோர், நரி வால் கொண்டு கடல் ஆழங்கண்டது போல, யானை கண்ட குருடர் போல, கூவல் ஆமை, குரைகடல் ஆமையைக் கூவலோ டொக்குமோ குரை கடல் எனக் கேட்டது போல, தம்தம் அறிவு அறிவகை அறிந்தனர்.

சோக்கிரட்டீஸ் என்னும் மகான் சிறையிலிருந்து தப்பி உயிர் பிழைக்க மார்க்கமிருந்த போதும், அதனைச் செய்யாது மகிழ்ச்சி யோடு மரண தண்டனையை ஏற்றது ஏன்?

நமது நாயன்மார்களும் ஆழ்வார்களும் நேற்று வாழ்ந்த காந்தியடிகளும் சொல்லொணாத் துன்பப்பட்டது ஏன்? இவர்களெல்லாம் அறிவற்றவர்களா?

பாரி எனும் வேந்தன் முல்லைக்குத் தேர் ஈந்தானாம்;

பேகன் என்னும் வள்ளல் மயிலுக்குப் போர்வை தந்தானாம்.

ஒரு வாய்க்கு உணவு கேட்ட ஔவைக்கு நால்வாயை (யானை) அதிகமான் அஞ்சி என்பவன் ஈந்தானாம்.

வேதகால ரிசிகளிலிருந்து நமது நாயன்மார்கள் வரை கடைப்பிடித்த தர்ம வாழ்க்கை பரிகாசத்திற்குரியதா? இன்றைய ஜனாதிபதி கலாம் அவர்கள் சிறுவனாயிருந்த போது, அவரது ஏழைத்தாய், தனக்குரிய றொட்டித் துண்டையும் தன் மகன் கலாமுக்கு அளித்துப் பட்டினியாயிருந்தது பேதமையா?

## பெண்கள் ஏன் துறவு பூணவில்லை?

பாரதத்தின் மாதாக்கள், அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிப் புறத்தாற்றில் போகாது, மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாரா வீட்டுக்கு விருந்தாயினர் என்பது வரலாறு. இந்து சமயம் - சைவ சமயம் பெண்கள் துறவு கொள்ள வேண்டும் எனக் கூறாமைக்கு என்ன காரணம்?

கலாம் அவர்களின் அன்னை போன்றவர் செய்யும் தவம் ஒன்றே அவர்க்கு வீட்டினை நல்கி விடும். இதை விடுத்து, துறவு எனத் தனியான ஒரு வாழ்வும் வேண்டுமோ? காவி உடுக்க வேண்டுமோ? காட்டுக்கோ ஆசிரமங்களுக்கோ போக வேண்டுமோ?

## சமுதாயச் சீர்கேடுகளை நியாயப்படுத்தலாமா?

இன்று நம்மவர் பெறும் நவீன கல்வியும், அதனால் பெறும் அறிவியற் சிந்தனைகளும் வரவேற்கப்பட வேண்டியனவே. பஞ்சமா பாதகங்களைத் தவிர்க்க முடிய வில்லை. அதனால் அதனை நியாயப்படுத்த முடியுமா?

மதுவை, விபச்சாரத்தை ஒழிக்க முடியவில்லை. அதனால் அவற்றை நியாயப்படுத்த முடியுமா? சினிமா முதலிய வற்றால் நகரங்களில் வாழும் மாணவியரிடம் காணப் படும் சட்ட விரோதக் கருச் சிதைவை நியாயப்படுத்திக் கவிதைகளும் கதைகளும் எழுதலாமா?

படுக்கை அறை, நீச்சல் உடைகளையும், கட்டில் சத்தத்தையும், முக்கல் முனகல்களையும் காட்டி, யதார்த்தம், மண்வாசனை என்று காரணம் காட்டிப் பெண்மையை மாசு படுத்தி, ஆண்களிடம் காம வக்கிரங்களை ஊக்குவிக்கும் எழுத்துக்கள் சிறந்த எழுத்துக்களா? காமத்துப்பால் எனப் பெயர் சூட்டிய வள்ளுவன், காமத்தினை எத்துணை நாகரி கமாகச் சிறிதும் விரசம் இன்றித் தெய்வீகம் தோன்ற எழுதி யுள்ளான். வள்ளுவர் வகுத்த பெண்மை இலக்கணத்துக்கு, இலக்கியமாகக் கண்ணகியைப் படைத்து, இளங்கோ இலக்கியம் செய்துள்ளார்.

தலைவியின் மெல்லிடையை வர்ணிக்க வந்தவர், ''அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள், நுசுப்பிற்கு நல்ல படா அப்பறை'' என்றார். அவளின் ஈர்க்கிடை போகா ஏந்திள வனமுலையினை, ''கடாக்களிற்றின் மேல் கட்படாம் மாதர் படாஅ முலைமேல் துகில்'' என்றார்.

யதார்த்தத்தை நாகரிகமாகச் சொல்ல முடியாதா?

காதற் காட்சிகள் கத்திமேல் நடப்பதற்குச் சமம் என்றார் வ.வே.சு. ஐயர். வள்ளுவர் போன்றோர்க்கு அந்த வித்தை தெரிந்திருந்தது.

இன்று யதார்த்தம், மண்வாசனை என்னும் பெயரில் நாடறிந்த எழுத்தாளர்களே, ''காற்றைத் துழாவிய ஆண் குறி'' (ஜெயமோகன்) எனவும், ''பல கைகள் முலையை நீவிவிட்டுக் கொண்டிருந்தன'' (சுந்தரராமசாமி) எனவும் எழுதுகின்றனர்.

இங்ஙனம், விடலைத்தனமாக எழுதுவதை, எழுத்தை ஆளும் எழுத்தாளர் கொண்டிருக்கின்றனர்!

விடலைத்தனத்தை எழுதுவதிலோ, விடலைத்தனமாக இருப்பதிலோ என்ன தவறு எனக் ''காலச் சுவட்டின்'' ஆசிரியர் கேட்கிறார்.

தமிழகத்துப் பெண்கள் கொதித்து எழாதது ஏன்?

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்பதுபோல, ஆண்களின் அக்கிரமங்களால் அல்லற்பட்ட பெண்கள், பெண்ணியல் வாதம் பேசுவதில் நியாயம் இருக்கிறது. இன்று, பெண்ணியல் வாதம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டு வருகிறது, பரவியும் வருகிறது. இந்த வாதம் அமெரிக்காவில் தேவைப்படும் அளவு வேறு; பிரித்தானியா முதலிய ஐரோப்பிய நாடுகளில் தேவைப்படும் அளவு வேறு. ஆசியாவில், இந்தியாவில், இலங்கையில், தமிழ் ஈழத்தில் தேவைப்படும் அளவு வெவ்வேறு. சாதிக் கொடுமை, சீதனக்

கொடுமை, சிறுபெண் சிசுக் கொலை, கொத்தடிமை முறை, பொட்டுக் கட்டுதல் முதலிய கொடுமைகளால், இன்னும் ஆண்களால் கொடுமைப்படுத்தப்படும் தமிழகத்துக் பெண்கள் அநீதிக்கு எதிராகக் கண்ணகி போலக் கொதித்து எழாதது வருந்தத்தக்கது.

**ஈழத் தமிழ்ப் பெண்களின் போராட்டம்**

தமிழீழ மகளிர், தேச விடுதலையோடு, தம் விடுதலையையும் பெறவே போராடி வருகின்றனர்.

கண்ணகி கையில் சிலம்பு; ஈழப் பெண் போராளி கையில் ஏகே ஃபாட்டி செவன் (AK 47).

அன்று மதுரை மாத்திரம் எரிந்தது; இன்று தமிழ் ஈழம் மாத்திரம் அல்ல, இலங்கை முழுவதுமே எரிகிறது. பெண்ணியல்வாதிகள் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் இன்றும் நிலவும் பெண்ணடிமை யோடு நோக்கும்போது, ஈழத் தமிழகத்தில் என்றும் பெண்ணடிமை இருந்ததே இல்லை என்றே சொல்ல வேண்டும்.

சொத்தில் முழு உரிமை வழங்குவதிலிருந்து, பெண்ணைப் போற்றியே வருகின்றனர். தமிழீழ விடுதலையில் மகளிர் ஆற்றி வரும் பங்கினால், புத்தம் புதியதோர் சமுதாயமே உருவாகி வருகிறது.

அங்கு, யாரும் யாருக்கும் அடிமை அற்ற நிலை உருவாகி வருகின்றது. இருந்த கொஞ்ச நஞ்சச் சாதி, சமய, பொருளாதார, பிரதேச ஏற்றத் தாழ்வுகள் மறைந்து வருகின்றன.

## கண்ணகியும் இலங்கை மக்களும்

கண்ணகி, கயவாகு மன்னன் காலத்திலிருந்து ஈழத் தமிழர் களால் பத்தினி அம்மன் எனவும், சிங்களச் சகோதரர்களால் 'பத்தினி தெய்யோ' எனவும் வணங்கப்பட்டு வருகின்றார். கண்ணகியின் ஆறிய கற்பினை ஈழத் தமிழ்த் தாயார் எல்லோரிடமும் காணலாம்.

அவளின் சீறிய கற்பிற்குப் போர்க்களத்துத் தம் இன்னுயிர் ஈந்துவரும் வீராங்கனைகளும், கிழக்கு மாகாணப் பூபதி அன்னை போன்றோரும் சான்றாவார்.

கண்ணகி ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்; வாழ்ந்து கொண்டேயிருப்பாள்.

★ ★ ★

# நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. ஈழத்தமிழர் யார்? (History of Eelam Tamils)
2. யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள் ஏற்றிவைத்த ஞான விளக்கு (ஆன்மீகம்)
3. யாழ்ப்பாணத்துச் சமையல் (Yaffna Cooking)
4. வருக தமிழர் பொற்காலம் (கவிதை நூல்)
5. காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும் (ஆன்மீகம்)
6. எனது காமத்துப்பால் (Sex As Perceived by the Tamils)
7. எனது போராட்டங்களும் தோல்விகளும் (My Struggles and Defeats)
8. மொழிப் பிரச்சனையா? இன வெறியா?



## வித்துவான் க.ந. வேலன்

ஆசிரியனாய் வாழ்ந்து, அரசியல்வாதியாகச் செயற்பட்டு ஆன்மீகவாதியாய் உயர்ந்து, அரசியலில் ஆன்மீகத்தைக் கலந்து இக்கால அரசியலைப் புடம் போட முயல்கின்ற **வித்துவான் க.ந. வேலன் என்ற கதிர்காமர் நல்லதம்பி இரத்தினவேல்** அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவ்வை துரைசாமிப் பிள்ளை என்ற செந்தமிழ்ச் சான்றோனிடமும் சிதம்பரநாதன் செட்டியார் என்ற சீரோனிடமும் சிலம்புத்தமிழும் சங்கத்தமிழும் கற்று அதே பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும், பி.ஓ.எல். பட்டமும் பெற்றவர். அதன் பின்னர் தத்துவ ஆராய்ச்சி செய்து அமரிக்கப் பல்கலைக்கழகத்தில் முனைவர் என்ற டொக்ரர் பட்டமும் பெற்றிருக்கிறார். தமிழிலக்கியத்தில் தோய்ந்து குளித்து மகிழும் வித்துவான் வேலன் அவர்கள், புலம் பெயர்ந்துவாழ் தமிழ் மக்களுக்கு தமிழியலையும் ஊட்டிவிட வேண்டும் என்று அயராது உழைத்து வருகின்றவர். வேலன் அவர்கள் நாடறிந்த பேச்சாளன்; ஏடறிந்த எழுத்தாளன்; உணர்ச்சி நிறைந்த உண்மையான கவிஞன்; சிந்திக்க வைக்கும் அரசியல் சித்தாந்தி. 'ஈழத்தமிழர் யார்?', 'வருக தமிழர் பொற்காலம்', 'காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும்', 'யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு' ஆகிய நூல்களை எழுதி வெளியிட்ட வேலன் அவர்கள் இப்போது 'கண்ணகி சிந்தாத கண்ணீர்' என்ற இந்த நூலை எழுதியிருக்கிறார்.

இப்போது இலண்டனில் தமது தனியொரு மகளான மாதினி சிறீக்கந்தராசா அவர்களுடன் வாழ்ந்து வரும் இவர், 'எனது காமத்துப்பால்', 'எனது போராட்டங்களும் தோல்விகளும்' என்ற வேறிரு நூல்களையும் விரைவில் வெளியிட இருக்கிறார்.